# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**செப்டம்பர் 2001 ஜீவியம் 7 மலர் 5**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 15 |
| லைப் டிவைன் | 16 |
| பகவானுடைய இதர நூல்கள் | 22 |
| அஜெண்டா | 24 |
| அன்பர் கடிதம் | 26 |
| லைப் டிவைன் - கருத்து | 29 |
| கன்சல்டன்சி | 31 |
| வாழ்வில் சிருஷ்டியின் இரகஸ்யம் | 33 |
| வாழ்வின் மறுமொழி | 38 |
| சாவித்ரி | 40 |
| எது நியாயம் | 42 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 46 |


❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**655) சரியாகச் செய்தால் திருவுளம் நிறைவேறட்டும் என்பது அகந்தையைக் கரைக்கும் என்கிறார் அன்னை. எது சரி?**

**பேச்சு, நோக்கம் போன்றவற்றிற்கு ஒரு நோக்கம் இருப்பதைப்போல் திருவுளம் நிறைவேறட்டும் என்பதற்கும் ஓர் உண்மையுண்டு. வாயால் சொன்னால் அது சப்தமாகி சீக்கிரம் அலுத்துவிடுகிறது. ஆழத்திலிருந்து உண்மையில்லாமல் சொன்னால் சீக்கிரம் எரிச்சல் வரும். ஒவ்வொரு சமயத்திலும் நம் இச்சை (will) ஓர் அபிப்பிராயம், பிரியம், வேகம், உந்துதலாக வெளிப்படுத்துவதைப் பார்க்கலாம். இறைவனை அழைப்பதன் முன் நம்மை ரத்து செய்ய வேண்டும். ஆழ்ந்த இடத்தில் திருவுள்ளத்தை நாட வேண்டும். அது சரி. அப்படி உச்சரித்தால் அது உள்ளுறை பிரம்மத்தைத் தொடும். அதற்கு மேல் உலகம் குரல் எழுப்பும். (refer 657)**

***ஆழ்ந்து திருவுள்ளத்தை நாடினால் உலகம் குரல் எழுப்பும்.***

மனித வாழ்வில் இறைவனின் திருவுள்ளம் என்ன? மனிதன் இறைவனாவதே அவன் திருவுள்ளம். அது நிறைவேறட்டும் என்றால், அதற்குத் தடையான அகந்தை கரைய வேண்டும். எதையும் உண்மையாகவும் சொல்லலாம், உண்மையில்லாமலும் சொல்லலாம். செலவாளி கடன் வாங்கிக் கொடுக்கமுடியாத நேரத்தில் எதிர்பாராமல் பெருந்தொகை வரும்பொழுது, முதலில் கடனைத் தரவேண்டும் என "உண்மை"யாக நினைக்கும்பொழுது, மனம் தனக்கு ஆர்வமான செலவை நாடும். முடிவாக தன் ஆர்வத்தைப் பூர்த்தி செய்து கொள்வானே தவிர, கடனைத் திருப்பித் தருவதில்லை. பணம் வரும்பொழுது,



கடனை மறப்பது ஒரு நிலை.

கடனைக் கொடுக்கக் கூடாது என்பது வேறொரு நினைப்பு.

கடனைக் கொடுக்க வேண்டும் என்ற நினைவும், வேறு செலவு செய்யும் நிலையும் ஒன்று,

கடனைக் கொடுக்க வேண்டும் என்ற தீவிர உறுதி உண்மையான மனநிலையாகும்.

கடன் விஷயத்தில் 4 மனநிலையிருப்பதுபோல் திருவுள்ளம் நிறைவேறட்டும் என்பதிலும் 4 நிலைகளுண்டு. சொல்லும், நினைவும், நிலையும் தீவிரமாக உண்மையாக இருந்தால் அது சரியான முறையாகும்.

மந்திரத்தை வாயால் சொல்வதில் பலன் ஏற்படுவதைப் பார்க்கிறோம். விஷக்கடிக்கு மந்திரித்தால் அது எளிய செயல் என்பதால் வாயால் சொன்னாலும் பலன் ஏற்படுகிறது. ஆழத்திலிருந்து உண்மையில்லாமல் சொன்னால் மனக்கோட்டை கட்டுவதாகும். அதில் உண்மையில்லை என்பதால் அலுத்துவிடும். வற்புறுத்தினால் எரிச்சல் வரும். நாம் என்பது அபிப்பிராயமாகவும், இச்சையாகவும்(will), பிரியமாகவும், வேகமாகவும், உந்துதலாகவும் வெளிப்பட்டுக் கொண்டேயிருப்பதைக் காணலாம். பேப்பர் படித்துக் கொண்டிருக்கும்பொழுது மனம் வேறொன்றை நினைக்கும். கண்ணால் படிப்பதைவிட நினைப்பதற்கு வேகம் அதிகம். அத்துடன் மனம் பல நிலைகளில் உள்ளது. உதாரணமாக தனக்கு பிரமோஷன் வேண்டும் என்று நினைப்பவர், அந்த நினைவுக்குப் பின்னால் பிரமோஷன் வந்தால் அந்தப் பெரிய போஸ்டில் நல்ல பெயரெடுக்க அதிகமாக உழைக்கவேண்டும், அது தன்னால் முடியாது என நினைப்பார். அந்த நினைவு பிரமோஷனைத் தடுக்கும். இடைவிடாது பிரமோஷனை நினைப்பதைவிட உள்ளூர உள்ள பயம் நிச்சயமாகப் பலிக்கும். அதனால் பிரமோஷன் வேண்டும் என்பது உண்மையில்லை என்று அறிய வேண்டும். மாறாகவுமிருக்கும். உதவி மேனஜேராக பிரமோஷனை விரும்புபவர் மனம், அவரை அறிந்தோ அறியாமலோ

தீவிரமாக “மானேஜராகிவிட்டால் முதலாளிக்குக் கம்பெனியைப் பற்றி சில ரகஸ்யங்களைச் சொல்லலாம். அது பலித்தால் பார்ட்னராகி விடலாம்” என்ற நினைவிருக்கும். அது பலிக்கும். அது பலித்தால் உண்மை அதுவேயாகும். திருவுள்ளம் நிறைவேறட்டும் என்று நினைப்பதை, சொல்வதை அதுபோல் நம் மனதிலுள்ள பல நிலைகளைக் கடந்து, உண்மையாக ஆண்டவன் விருப்பம் நிறைவேறட்டும் என ஆழத்தில் உண்மையுடன் சொன்னால், அதற்குத் தடையான அகந்தை கரையும். அது பூர்த்தியாக உதவும் கற்பனை ஒன்றையும் அன்னை எழுதுகிறார். “இறைவன் முன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதை ஒவ்வொரு முறையும் கற்பனை செய்ய வேண்டும்” என்கிறார்.

❋ ❋ ❋

**656) கையால் வேலை செய்கிறோம். அறிவால் புரிந்து கொள்கிறோம். அறிவு செயலைவிட உயர்ந்ததைப் போல், ஆன்மாவால் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும். புறநிகழ்ச்சிகளின் பலனை நாடுவதற்குப் பதிலாக, அகவுணர்வின் பலனை நாடினால் அளவு கடந்த ஆன்மீக வாய்ப்பு எழும்.**

*புறம் அகமானால் ஆன்மீக வாய்ப்பு அபரிமிதமாகும்.*

ஆன்மா சாட்சியானது, செயலற்றது என்பதால் ஆன்மாவால் செயல்படுவது எப்படி? ஆன்மாவின் பிரதிநிதியான சைத்தியப் புருஷன் ஆன்மாவாகும். அது இடையறாது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் மூலம் நாம் செயல்பட வேண்டும்.

ஆன்மாவால் செயல்படுவதை ஆன்மீக உழைப்பு எனலாம். ஆன்மீக உழைப்புக்குப் பலன் அளவு கடந்தது.

இங்கிலாந்தில் ஒரு பெண்மணி காலிங்பெல் அடிப்பதைக் கேட்டு வெளிவந்தாள். திடகாத்திரமான ஓர் ஆள் நின்றிருப்பதைக் கண்டு என்ன வேண்டும் என்றாள். அவன் பிச்சைக்காரன். சாப்பிட ஏதாவது



வேண்டும் என்றவுடன் அவளுக்குக் கோபம் வந்தது. திடகாத்திரமாக இருக்கிறாயே, ஏன் வேலை செய்யக்கூடாது என்றாள். அவன் அறிவைப் பயன்படுத்த முயன்றான். பிரபல சினிமா நடிகையின் அழகோடு நீங்கள் சமையலறையில் உழலவில்லையா? நானும் அதைப் போன்று உழல்கிறேன் என்றான். “ இரு, என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன்” என்றாள். கோபம் சந்தோஷமாக மாறியது.

சமர்ப்பணம் செய்து வேலை செய்வது ஆன்மாவால் செயல்படுவதாகும். சமர்ப்பணம் ஆன்மீக முன்னேற்றத்தைத் தரும். அத்துடன் அபரிமிதமாக வேலையைப் பூர்த்தி செய்யும்.

தினமும் 7, 8 தபால் எழுதி அனுப்புபவர் தபால் ஸ்டிரைக் வந்தவுடன், வழக்கம்போல் தபால் எழுதினார். அவருடைய டைப்பிஸ்ட் தபால் ஸ்டிரைக் கால வரையறையின்றி இருக்குமாம். இப்பொழுது எழுதி எப்படி அனுப்புவது என்றார். தபால் ஸ்டிரைக் நமக்குப் புறநிகழ்ச்சி. அதை நாம் கருத வேண்டாம். அது நின்றபின் தபால் எழுதலாம் என்பது பக்தர்களாகிய நமக்குச் சரியில்லை. நாம் செய்வதைச் செய்ய வேண்டும். நம் கடமையில் குறையிருக்கக் கூடாது. அதுவே நம் பங்கு என்றார். அவர் எழுதினார், கடிதங்கள் டைப் அடிக்கப்பட்டு, தபாலுக்குத் தயாராகின. அடுத்த நாளும், மறுநாளும் அதையே செய்ய டைப்பிஸ்ட்டுக்குச் சலிப்பு. ஒரு நாள் கடிதங்களை டைப் செய்யவில்லை, தவற்றை உணர்ந்து அடுத்த நாள் அவற்றை சேர்ந்து முடித்தார். குவிந்திருந்த எல்லாத் தபால்களையும் அடுத்த நாள் மாலை 5½ மணிக்குப் பதில் எழுதி முடித்தார். வேலை நிறைவேறியது போன்ற உணர்வு. 7 மணிக்கு ஸ்டிரைக் நின்றுவிட்டதாகச் செய்தி. தபால் ஸ்டிரைக் என்பது அகில இந்தியாவிலும் நடப்பது. ஒருவர் எழுதும் தபாலுக்கும் அதற்கும் தொடர்பு என்பது ஓரிழை, அதுவும் இலட்சத்தில், கோடியில் ஓரிழை, என்றாலும் அகவுணர்வுக்கு முக்கியத்துவம் அளிப்பவர் நாம் எத்தனைச் சிறிய பகுதி என்று கருதாமல், நாம் எதையோ சாதிக்கப் போகிறோம் என்று நினைக்காமல், புற நிகழ்ச்சியைப் புறக்கணித்து, அகவுணர்வான கடிதம் எழுதும் கடமையை மட்டும் கவனித்தால்,

தன் கடமை பூர்த்தியான நேரம், தனக்கு தடையாயிருந்த ஸ்டிரைக் விலகுவதைக் காணலாம். "நான் எழுதி முடித்தேன். ஸ்டிரைக் அதனால் நின்றது" என்ற "ஞானம்" உதயமானால் அது அகந்தை வளரும் வழி. அடக்கம் வளரும் முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். நான் எழுதியதால் ஸ்டிரைக்கை எப்படிப் பாதித்தது என்று ஆராய்ச்சி செய்வதைவிட, பாக்கியான தபால்களை எழுதி முடித்தவுடன், தடையாக இருந்த வேலை நிறுத்தம் நின்றது என்று புரிந்து கொள்வது உதவும்.

அகவுணர்வு, புறநிகழ்ச்சிகளை நிர்ணயிக்கும். அதைக் கண்டு கொண்டு அதன் மூலம் அகந்தையை வளர்க்காமல், ஆன்மிக உழைப்பை வளர்க்க முயன்றால்,ஆன்மீக வாய்ப்பு தொடர்ந்தெழும்.

❊ ❊ ❊

**657) திருவுள்ளம் நிறைவேறட்டும் என்று மந்திரமாக உச்சரித்தால் ஆன்மா நம்மையறியாமல் விழித்துக் கொள்ளும். அதற்கும் பலனுண்டு. சூட்சுமத் தரிசனம், மனம் அடங்குதல், ஆசையின் வேகம் அழிவது, செயலும் இரண்டாகப் பிரிந்து நம்மை நாடியும் விலகியும் போவது ஆகிய பலன் தெரியும். ஆசைக்குரியது அகன்று போய், அது நம்மிடம் வக்கிரமாக நடந்து கொண்டு நமக்கு மனிதர்களைப் பற்றி அதிகமாகப் புரிய ஆரம்பித்து சூழ்நிலை மாறும். விடாமுயற்சி, ஆர்வம், ஞானத்தேடல் அவற்றை புது உலகமாக நமக்களிக்கும்.(refer 655)**

- *திருவுள்ளம் நிறைவேறப் பிரார்த்தனை செய்தால் ஆன்மா விழிக்கும்.*
- *ஆசையழிந்து, சுபாவம் புரிந்து, சூழல் மாறி, ஞானத்தைத் தேடும் புது உலகம் பிறக்கும்.*



மந்திரத்தின் உட்பொருளை மனதில் வாங்கி, புரிந்து, ஏற்றுக் கொண்டு அதன் சக்தியை மனத்தின் மூலம் 'ஜீவனுள்' பரவ அனுமதித்தால், அதன் முழுப் பலன் உடனே ஏற்படும். ஆன்மா விழிப்பாக இருப்பதில்லை, மனம் கருத்தை விளங்கிக் கொள்வதில்லை. மனம் விளங்கிக் கொண்டதை உணர்வு ஏற்றுக் கொள்வதில்லை. உடல் இருளால் நிறைந்து எதையும் அனுமதிப்பதில்லை. மனம் மந்திரத்தைச் சொல்வதையே எதிர்க்கும். நான் நன்றாகப் படித்துப் பாஸாக வேண்டும் என்று ஒரு சோம்பேறி நினைக்கும்பொழுது, படிக்க விரும்பாத உடல் அவன் சொல்லை மாற்றிவிடும். நான் நன்றாகப் படித்துப் பாஸாகக்கூடாது என்று வாய் உச்சரிப்பதைக் காணலாம். இது உடலின் எதிர்ப்பாகும். திருவுள்ளம் நிறைவேறட்டும் என்ற எண்ணத்திற்கு உடலும், உணர்வும் உடன்பாடில்லை என்றாலும், மனம் புரிந்து கொள்ள முடியாத நிலையிலிருந்தாலும், மந்திரமாகத் திருவுள்ளம் நிறைவேறட்டும் என்று உச்சரித்தால் அதற்கும் பலன் உண்டு. விழிப்பில்லாத ஆன்மா விழித்துக் கொள்ளும். ஜீவன் ஓரளவு சூட்சுமமாக இருப்பவர்கட்குச் சூட்சுமப் பார்வை உற்பத்தியாகி அன்னை சூட்சுமத் தரிசனம் கிடைக்கும். யோகம் பலித்த பிறகும் மனம் பூரணமாக அடங்காது. பலருக்கு மனம் அடங்கவே அடங்காது. திருவுள்ளம் நிறைவேறட்டும் என்பதை அதற்குரிய உச்சகட்ட உணர்வோடு இல்லாமல் வெறும் மந்திரமாகச் சொன்னாலும், மனம் அடங்கும்.

இந்திர பீடத்திற்கு ஆபத்து வரும் அளவு கடுமையாகத் தவம் செய்து பலித்த பின் தெய்வலோகக் கன்னிகையைக் கண்டு ஆசை எழுந்து, அத்தனைத் தவப் பலனையும் இழந்தவர்கள் முனி சிரேஷ்டர்கள். ஆசை அழிதல் என்பது உயர்ந்தது. ஆசையின் வேகம் அழிவதற்கே 60, 70 வயது போதாது. இம்மந்திரத்தால் ஆசையின் வேகம் அடங்குவதையும் காணலாம்.

செயல் நல்லது, கெட்டதாகப் பிரிந்து, நல்லது நம்மை நாடுவதையும், கெட்டது விலகுவதையும் காணலாம். தானே கெட்டது நம்மை விட்டு விலகும் சந்தர்ப்பம் இன்று உலக வாழ்விலில்லாதது.

நாம் ஆசைக்குரியதாக நமக்குப் பொருத்தமற்றதை விரும்புகிறோம். அது தானே தூரப் போகும். போனபின் அதன் குணத்தைக் காட்டும். அதனால் நாம் மீண்டும் அதை நாட வேண்டும் என்ற எண்ணத்தை மறப்போம். இந்நிலையில் நாம் விடாமுயற்சி, ஆர்வம், ஞானத்தை நாடும் பாங்கு ஆகியவற்றை மேற்கொண்டால், நம் உலகம் தாழ்ந்தது விலகி, உயர்ந்த புது உலகம் உற்பத்தியாகி, நாம் புது மனிதராவோம். இம்மந்திரம் அதன் உச்சகட்டத்தில் மனிதனை சத்திய ஜீவனாக்கும், அதன் முழு உட்பொருளையும் நாம் பெற முடியாவிட்டாலும், புது உணர்வு, புது நிலை, புது மனம் உற்பத்தியாகி புதிய உலகத்தை நமக்குக் காட்டவல்லது இது.

❋ ❋ ❋

**658) அறியாமை விழித்து அறிவாக மாறும்பொழுது அது செயலிலும், உணர்ச்சியிலும், எண்ணத்திலும் பிரதிபலிப்பது உள்ளுணர்வைக் கண்ணாடியாக வாழ்வு பிரதிபலிப்பதாகும்.**

***அறியாமை அறிவாகி நம்முள்ளுணர்வு வாழ்வை பிரதிபலிப்பது ஆன்ம விழிப்பாகும்.***

இறைவனை அறியாதது அறியாமை. அறிவது அறிவு. ஒரு குழாய் கசிகிறது எனில், கசிவை அடைப்பது நம் செயல் (a physical work). ஏன் கசிவை அடைக்கிறோம் என்ற கேள்வி நமக்கு எழுவதில்லை. எப்படி அடைக்காமலிருக்க முடியும் என்ற கேள்வியே எழும். மனிதன் அறியாமையுடையவன். அவன் திறமையைச் செயலில் வெளிப்படுத்த கசிவை அடைக்கும் முயற்சியை மேற்கொள்கிறான். நாமெல்லோரும் இப்படித்தான் செயல்படுகிறோம். இதை முறைமை, திறமை, அறிவு எனக் கொள்கிறோம். இது நம்மைப் போன்ற சாதாரண மனிதனுக்குச் சரி.



அன்னையை ஏற்றுக் கொண்டு, பக்தனாய், சாதகனாய், விழிப்புற விரும்புகிறவன் இப்படிச் செயல்படுவது சரியில்லை. அவன் உடலால் மட்டுமோ, அறிவால் மட்டுமோ செயல்பட்டால், அவனுக்கு அது அறியாமை. ஆன்மாவால் செயல்படுதல் அறிவுடைமையாகும். குழாய் கசிவதில் ஆன்ம விழிப்பு எப்படி வரும். ஆன்ம விழிப்பு, ஆன்மீக சக்தி கசிவை அடைக்க முடியும், நிறுத்த முடியும் என்று நம்ப ஒருவருக்கு ஆன்மா விழிப்பாக இருக்கவேண்டும். ஆன்மா விழிப்பாக இருந்தால், கசிவை நிறுத்த முடியும் என்று நம்ப முடியும். நம்பினதால் கசிவு நின்ற நிகழ்ச்சியை வேறொரு கட்டுரையில் எழுதியிருந்தேன்.

கசிவு நின்றால் ஆன்மா செயல்பட்டுக் கசிவை நிறுத்திவிட்டது எனப் பொருள். அறியாமை விழித்து அறிவாக மாறியது எனப் பொருள். இது செயலிலும், உணர்விலும், எண்ணத்திலும் பிரதிபலிப்பது எப்படி?

ஜடமான ரிப்பேர் செய்யும் செயலை நம்புவது அறியாமை. கண்ணுக்குத் தெரியாத ஆன்மாவை நம்புவது அறிவுடைமை. கசிவு நிற்கும் என மனம் நம்பியவுடன், மனம் பரந்து விரிவதை உள்ளே உணரலாம். மனநிறைவாக அது தெரியும், மனம் நிறைந்தவுடன் நம்பிக்கை முழுமை பெறும். மனத்தில் ஏற்படும் நம்பிக்கை, குறுகிய மனம் விரிவது, மனம் நிறைவது ஆகியவை எண்ணத்தில் ஏற்படும் பிரதிபலிப்புகளாகும்.

ஆன்மா இனிமையானது. வாழ்வுக்கில்லாத இனிமை ஆன்மாவுக்குண்டு. ஆன்மா விழிப்புற்றவுடன் நெஞ்சில் இனிமை தோன்றும். நெஞ்சம் இனித்தால் ஆன்மா - சைத்தியம் - மேலே பூத்து வருகிறது எனப் பொருள். மற்றவர் மீது இதுவரை இல்லாத கருணையும், பரிவும் தோன்றும். ஜடப்பொருள்கள் மீதும் அன்பு சுரக்கும்.

கசிவு என்ற செயலிலும் நம் ஆன்ம விழிப்பு பிரதிபலித்து, கசிவு நின்றுவிட்டது என்று மாறும். கசிவு, துவாரம் அடையாமல், நின்றுவிட்டால், தடையில்லாத துவாரத்தின் வழியே தண்ணீர் கசியவில்லை என்றால், ஜடமான குழாய் ஆன்ம விழிப்பை ஏற்றுப் பிரதிபலிக்கிறது என்று பொருள்.

இதைக் கண்ட பின் முதலில் செய்ய வேண்டிய காரியம், கசிவை அடைக்க வேண்டும். ஆன்மவிழிப்புக்கு அவசியமானது எல்லாப் பொருள்களும் ரிப்பேரில்லாமலிருப்பது. எனவே அதை முதற்காரியமாகச் செய்ய வேண்டும்.

❊ ❊ ❊

**659) பகுத்தறிவு வெற்றிக்குத் தடை. சக்தி பிராணனை நிரப்பினால் காரியம் பூர்த்தியாகிறது. அறிவு சக்தியின் ஒரு பகுதியைச் செலவிடுகிறது. காரியம் முடிந்தபின் விளக்கத்தைத் தேடி அறிவு வரலாம். முதலிலேயே அறிவு செயல்பட்டால் காரியம் தடையாகும்.**

*பகுத்தறிவு விலகி சக்தி பிராணனை நிரப்பி காரியம் பூர்த்தியாகும்.*

நமக்குக் காரியம் சிறப்பாகக் கூடி வந்தபொழுது "நான் இதையெல்லாம் நினைக்கவில்லை. தானே நடந்தது. எப்படி நடந்தது என்று தெரியவில்லை" என்று பெரும்பாலும் சொல்வதாக இருக்கும்.

வேறு சில நேரங்களில் அதேபோல் காரியம் சிறப்பாகக் கூடி வந்தால், "எல்லாம் முதலிலேயே திட்டமிட்டது. திட்டம், போட்டது போல் எழுத்துக்கு எழுத்து அப்படியே நடந்தது" என்று சொல்வதாக அமையும்.

நம் நிலைமைக்கு மீறியது கூடி வருவது முதலில் சொல்லியது, அடுத்தாற்போல் சொல்லியது நம் நிலைக்குட்பட்டதாகும். நம் நிலைமைக்கு உட்பட்ட காரியம் திட்டமிடுவதால், யோசனை செய்வதால், மீண்டும் மீண்டும் பேசுவதால் சிறப்பாகப் பூர்த்தியாகும்.



அம்முறையை நம் நிலைமைக்கு மேற்பட்ட செயலில் பின்பற்றினால் பகுத்தறிவு தடையாகும். காரியம் பூர்த்தியாக வேண்டிய சக்தியில் ஒரு பகுதியைச் சிந்தனை செலவிடும். அதனால் காரியம் பூர்த்தியாகாது.

1977இல் 2000ரூபாய் சம்பாதிப்பவர் 15 இலட்ச ரூபாய் கம்பெனி ஆரம்பிக்க முயன்றபொழுது எவருக்கும் கிடைக்காததுபோல் அத்தனைப் பணமும் விரைவில் சாங்ஷனாயிற்று. தொழிற்கூடம் கிடைப்பது அரிது என்ற நிலையில் தற்செயலாய் இன்ஸ்பெக்ஷனுக்கு அடுத்த கட்டடத்திற்கு வந்த டைரக்டர் இக்கம்பெனியைப் பார்த்து வியந்து, ஒரு தொழிற்கூடத்தைக் கொடுத்தார். டெக்னாலஜி, மார்க்கெட், முதல், கூடம் எதிர்பாராமல் கிடைத்தன. பகுத்தறிவு வேலை செய்ய ஆரம்பித்தது. அடுத்தாற்போல் நடக்க வேண்டியவற்றைப் பற்றிச் சிந்தனை செய்தது. அதாவது மனம் ஓடியது. ஒவ்வொன்றாக ரத்தாகியது. அடுத்த 6, 7 வருஷம் போராட்டமாயிற்று. முடிவில் சிந்தனை நின்றது. சிந்திக்க எதுவுமேயில்லை. சிந்தனை ஓடவில்லை. பல கோடி தொழிலில் பங்கு அமைந்தது. சிந்தனை எழவில்லை. முழுத் தொழிலும் தனக்கே வந்தது.

ஆகையால் செயல்பாட்டிலும், தனக்கு மீறிய நிலையில், அறிவால் செயல்பட்டாலும் காரியம் தடையாகும். தனக்கு மீறிய நிலையில் வருவது அருள். அதைப் போற்றி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நம் திறமைக்கு உட்பட்ட இடத்தில் திட்டம், பகுத்தறிவு, சிந்தனை, எழுத்து, பேப்பர், அத்தனையும் பலன் தரும். புள்ளி போட்டால், போட்டதுபோல் நடக்கும். பார்ப்பவர் பிரமிக்கும் வகையில் காரியம் பூர்த்தியாகும். இதையும் சிந்தனையை விலக்கிச் செய்ய முடியும். அது சமர்ப்பணம். அது முடிந்தால், பலன் அளவு கடந்து வரும். தொழிலுக்குரிய முறையன்று அது. யோகத்தில் செயலைச் சமர்ப்பணம் செய்து மலரச் செய்யும் வழி அது.

❊ ❊ ❊

**660) ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி அவர் தத்துவம்.**
**பரிணாமம் முடிவானால் அதன் ஆரம்பம் உயிர் பிழைத்து வாழ்தலாகும்.**
**பிழைப்பு - வளர்ச்சி - அடுத்த நிலைக்குரிய வளர்ச்சி - பரிணாமம் என்பது முழு அளவுகோலாகும்.**
**இந்த அளவுகோல் நம் ஒவ்வொரு கரணத்திற்கும் பொருந்தும்.**
**இன்று நாம் இந்த அளவுகோலின் எந்த நிலையிலிருக்கிறோம்?**
**முதல் நிலையான உயிர் பிழைத்தல் புரிகிறது.**
**வளர்ச்சி நமக்குத் தெரிவதில்லை. உடல் வளர்வதாலும், அது நம் கண்ணுக்குத் தெரியாததாலும் அது புரிவதில்லை.**
**உடலின் வளர்ச்சியை அறிய முடியாத நிலையிலிருந்து, முயன்று ஆன்மீகப் பரிணாம வளர்ச்சிக்குப் போவது யோகம்.**

- *நிலையான வாழ்வே ஆரம்பம்.*
- *பிழைத்து வளர்ந்து மாறுதல் எந்நேரமும்.*
- *நம் நிலை தெரிவது விழிப்பு.*
- *முதல் நிலையிலிருந்து முடிவான நிலைக்குப் போவது ஆன்மீகப் பரிணாமம்.*

போதுமான தெம்பில்லாமல், வருமானமில்லாமல் பிழைக்க முடியுமா என்று போராடி பிழைப்பவன் (survival) தன் முயற்சியை விவரமாக அறிவான். தனக்கு வந்த இடர்களும் தான் எடுத்த முயற்சியும் அவனுக்கு நினைவிருக்கும்.

வளரும் குழந்தைக்குத் தான் வளர்வது தெரியாததுபோல் வளமான சந்தர்ப்பத்தில் பிறந்து, வசதியான வாய்ப்புகள் - கல்வி, சொத்து, அன்பு, ஆதரவில் - வந்து நிலை தொடர்ந்து உயர்ந்தால், அது சந்தோஷமாகச் சௌகரியமாக இருக்கும். தனக்கு வந்தவை வாய்ப்புகள் என்பது தெளிவாகத் தெரியாது. சில சமயங்களில்



தெரியவே தெரியாது. இது வளர்ச்சியின் தன்மை. (This is unconscious growth).

இருக்கும் நிலையிலேயே - குமாஸ்தா, சிறு விவசாயி, பெரிய வியாபாரி, அதிகாரி - உள்ள வளர்ச்சி நமக்குத் தெரிவதில்லை. அடுத்த நிலைக்குப் போகும் வளர்ச்சி (development) என்பது குமாஸ்தா ஆபீசராகும் வளர்ச்சி, அதிகாரி அரசியல்வாதியாவது. இவை நாம் அறிந்த முயற்சிகள். சுலபத்தில் நடக்காது. பெருமுயற்சி தேவை. நூறில் ஒன்று பலிக்கும். சாண் ஏறினால் முழம் சறுக்கும். வெற்றி அரிது.

பரிணாமம் என்பது மனிதன் குரங்கிலிருந்து பிறந்தது. மனிதன் சத்திய ஜீவனாவது. சமூகத்தில் பரிணாம வளர்ச்சிக்கு ஓரளவு உதாரணம் சொல்லலாம். அனாதைப் பையன் தொழிலதிபராவது பரிணாம வளர்ச்சி எனலாம். அனாதைக்கும், தொழிலுக்கும் சம்பந்தமில்லை. இது அடுத்த கட்டமுமில்லை. அடுத்த பரிணாம நிலை என வர்ணிக்கலாம்.

பிழைப்பு - வளர்ச்சி - அடுத்த நிலைக்குரிய வளர்ச்சி - பரிணாமம் என்பது முழு அளவுகோலாகும். இது மனத்திற்கும், உடலுக்கும், உணர்வுக்கும், ஆன்மாவுக்கும் பொருந்தும். முதல் தலை முறையில் படிப்பவன் 4 வகுப்போடும் அடுத்த அடுத்த தலை முறைகளில் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து சில தலைமுறைகளில் பெரிய படிப்பு, பெரிய அறிவு பெறுவதும் வழக்கம். அது போன்றில்லாமல் முதல் தலைமுறையிலேயே வெளிநாட்டு Ph.D. டாக்டர் பட்டம் பெற்று மேதையாக முயல்வது போலுள்ள நிலை வளர்ச்சியை அறியமுடியாத மனிதன் பரிணாம வளர்ச்சியை நாடுவது, பல நிலைகளை ஒரே முயற்சியில் கடக்கும் செயல் இது.

இது மனித முயற்சிக்குரியதன்று. அன்னை சக்தியால் முடியக் கூடியது. மனிதன் சத்திய ஜீவனாக அன்னை அருளால் உயர முடியும். இது முடியாதவர்கள் மற்ற கரணங்களில், வாழ்வில் இது

போன்ற பலனை நாடலாம். அதற்கு அன்னையின் உதவியை நாடலாம். இதுவரை நம் அனுபவங்களில் நம்மை அறியாமல் அன்னை செயல்பட்டு ஓரளவு இது போன்ற பலன் பெற்றிருப்பதைப் பலரும் நினைவுபடுத்தலாம். நம்மையறியாமல் பலன் இதுபோல் வந்தது என்றால், நாம் முயன்று பெற விரும்பினால் (conscious effort) பலன் நிச்சயமாகக் கிடைக்கும்.

நாமுள்ள நிலை எதுவானாலும் அதிலிருந்து உச்சகட்ட நிலைக்கு ஒருவர் போக விரும்பினால், அதற்குரிய முறைகளை அவர் பின்பற்றினால், அது நிச்சயம் பலிக்கும் என்பதற்கு அன்பர்கள் வாழ்வில் அநேக நிகழ்ச்சிகளுண்டு.

நம் பங்கு அதற்குரிய முயற்சி. நாம் எட்ட நினைக்கும் நிலைக்கும் குறைவான நிலையின் பழக்கங்களை நாம் விருப்பமாக தயாராக அறவே அகற்ற முன்வர வேண்டும்.

*தொடரும்...*

❊ ❊ ❊

**ஜீவிய மணி**

சொரூபம் சுபாவமாவது சிருஷ்டி.



# இம்மாதச் செய்தி

முடியாதபொழுது விட்டுக் கொடுக்கிறோம். முடிந்த இடத்திலும் அறிவால் விட்டுக் கொடுப்பது விவேகம். தெய்வத்தை நோக்கிச் செல்ல இது உதவும்.

“ஒரு வாய் தண்ணீரானாலும், நீயே முன்வந்து உவந்து அளிக்காததை ஏற்றுக் கொள்ளாத மனநிலையை எனக்கு அளித்து வரமருள்வாய் தாயே”.

❊ ❊ ❊

# லைப் டிவைன்

கர்மயோகி

## X.Conscious Force

*P. No. 80*

*Para No : 1*

**Existence can be phenomenal.**
**It can have experience.**
**That experience can be self-presentation.**
**In that existence resolves itself.**
**It resolves itself into Force.**
**Force is a movement of energy.**
**This energy assumes various forms.**
**Those forms can be more or less material.**
**They can also be more or less gross.**
**They can even be subtle forms.**
**In ancient days human thought created images.**
**It tried an image of this origin.**
**This origin is a law of being.**
**It tried to make it real to itself.**
**It tried to make it intelligible.**
**The origin is an infinite existence of Force.**
**This was figured as a sea by them.**
**They conceived it at rest initially.**
**At rest, it had no forms.**
**It moved.**
**It was the first initiation.**
**It created forms.**
**Forms were necessary for that movement.**
**It is the seed of the universe.**



## 10. சித் - சக்தி

நாம் சிருஷ்டியில் தோற்றத்தை அறிவோம்.
அது அனுபவத்தை நாடுகிறது.
தன்னைத் தானே உணரும் அனுபவம் அது.
அனுபவத்தில் சத் புருஷன் மாறுகிறான்.
சத் புருஷன் சக்தியாக மாறுகிறான்.
(*Force*) சக்தி என்பது (*energy*) சக்தியின் சலனம்.
சக்தி பல்வேறு ரூபங்களில் வரும்.
இவ்உருவங்கள் கிட்டத்தட்ட ஜட உருவங்களாக இருக்கும்.
அவை கிட்டத்தட்ட பொருளாலான உருவங்களாகவுமிருக்கும்.
அவை சூட்சும உருவங்களாகவுமிருக்கும்.
பண்டை நாளில் மனிதன் பிம்பங்களை உற்பத்தி செய்தான்.
ஆதியான இந்நிலைக்குரிய பிம்பம், ரூபம், தயாரிக்க முயன்றான்.
ஆதி ஜீவனுக்குரிய சட்டம்.
இதுபோன்ற பிம்பம் தனக்குத் தெளிவாக இருக்க வேண்டும்.
அது தனக்குப் புரிய வேண்டும் எனவும் கருதினான்.
ஆதி என்பது சக்திக்கு முன்னிலையான சத் புருஷனாகும்.
அதை, கடல், சமுத்திரம் எனக் கூறினர்.
முதலில் அது சலனமற்றிருந்ததாகச் சொன்னார்கள்.
அமைதியான நிலையில், அதற்கு ரூபம் இல்லை.
சலனம் எழுந்தது.
அதுவே முதல் அசைவு, ஆரம்பம்.
ரூபங்களைச் சலனம் உற்பத்தி செய்தது.
சலனமெழ ரூபம் தேவை.
அது பிரபஞ்சத்தின் வித்து - பீஜம்.

Matter is the presentation of force. *P. No. 80*
Force is most easily intelligible. *Para No : 2*
It is our intelligence that perceives.
It is moulded by contacts in Matter.
That is how it is.
Mind is involved in the brain.
The brain gives the response to matter.
The old Indian physicists had a view.
They describe the material Force.
They tell us about its elementary state.
It is a condition of pure material extension in Space.
It has a peculiar property.
It is a variation of sound.
Sound typifies it to us.
We want to create forms.
Vibration in this state of ether is not enough.
To create forms, obstruction must be there.
The force must be obstructed.
There must be contraction.
Also, expansion must be there.
Interplay of vibration too is necessary.
Force must impinge upon force.
That creates a fixed relation.
It also creates mutual effects.
Material Force's first status is ethereal.
It modifies it further.
The second status is called aerial.
It is the old language.
It has a special property.
It is a contact between force and force.
This is the basis of all relations.



ஜடம் என்பது சக்தி.
சக்தியை உணர முடியும்.
உணர்வது நம் புத்தி.
ஜடம் ஜடத்தோடு இணைவதால் ஏற்படுவது ஜடம்.
இவ்விதமாக ஜடம் உள்ளது.
மனம் மூளையிலுள்ளது.
மூளையிலுள்ள மனம் ஜடத்தை உணருகிறது.
பழைய இந்திய விஞ்ஞானிகளுக்கோர் அபிப்பிராயமிருந்தது.
அவர்கள் ஜடசக்தியை விளக்குகிறார்கள்.
அதன் ஆரம்ப நிலையைக் கூறுகிறார்கள்.
ஜடம் தன்னை விரிவுபடுத்தி இடமாக்குவது அந்நிலை.
அதற்கு ஒரு குறிப்பிட்ட குணம் உண்டு.
அது சப்தம்.
சப்தம் அக்குணத்தைக் குறிக்கும்.
நாம் ரூபங்களை உருவாக்க முயல்கிறோம்.
வெளியின் கதிர் இந்நிலையில் நமக்குப் பயன்படாது.
உருவம் உருவாகத் தடை அவசியம்.
சக்தியைத் தடை செய்ய வேண்டும்.
அது சுருங்குவது அவசியம்.
விரிவடைவதும் அவசியம்.
கதிர்கள் கலந்து செயல்படுவதும் அவசியம்.
சக்தி, சக்தியுடன் மோத வேண்டும்.
அதனால் நிலையான தொடர்பு ஏற்படும்.
இரு பக்கமும் அது பலன் தரும்.
ஜடசக்தியின் முதல் நிலை ஆகாயம்.
அதை மேலும் மாற்றுகிறது.
இரண்டாம் நிலையை வெளி என்கிறோம்.
இது ஆதி நாள் மொழி.
அதற்குக் குறிப்பிட்ட குணமுண்டு.
சக்தியும் சக்தியும் சந்திக்கின்றன.
இதுவே எல்லாத் தொடர்புக்கும் அடிப்படை

**This contact is the basis.**
**Still real forms are not created.**
**What we have is only varying forces.**
**A sustaining principle is needed.**
**This is provided by a third modification.**
**It is a self-modification.**
**It modifies the primitive Force.**
**The principle here is light.**
**It is light, electricity, heat and fire.**
**Fire and heat are the characteristic manifestation.**
**Even then, we can have forms of force.**
**They will preserve their own character.**
**They will also preserve their peculiar action.**
**Still, stable forms of Matter will not be there.**
**There is a fourth state.**
**It is characterised by diffusion.**
**It will be a first medium for the next stage.**
**It is of permanent attractions.**
**Also of repulsions.**
**It is termed water or liquid state.**
**This is water.**
**A fifth state is also there.**
**It is a state of cohesion.**
**It is a solid state.**
**It is earth, as they called it.**
**These are the elements.**
**They are necessary.**
**It completes their list.**

***contd...***



**தொடர்பு அடிப்படை.**
**இருப்பினும் உண்மையில் உருவம் எழவில்லை.**
**மாறும் சக்திகளை நாம் காண்கிறோம்.**
**நிரந்தரமான தத்துவம் தேவை.**
**மூன்றாம் மாறுதல் எழுகிறது.**
**இது தன்னைத் தானே மாற்றுவது.**
**ஆதி சக்தியை மாற்றுகிறது.**
**இங்கு ஒளி தத்துவம்.**
**அது ஒளி, மின்சாரம், உஷ்ணம், நெருப்பு.**
**நெருப்பும், உஷ்ணமும் இவை வெளிப்படுவதைக் குறிக்கின்றன.**
**அப்படி என்றாலும் அவை சக்தியின் ரூபங்களாக இருக்கும்.**
**அவற்றிற்குத் தங்கள் சொந்தக் குணம் முத்திரையாய் விளங்கும்.**
**தங்களுக்கேயுரிய குறிப்பிட்ட செயலையும் அவை பெற்றிருக்கும்.**
**இருப்பினும், நிலையான ஜட உருவங்கள் எழா.**
**இது நான்காம் நிலை.**
**இதன் முக்கியக் குணம் விரைந்து பரவுதல்.**
**அடுத்த நிலைக்கு அது முதல் வழி.**
**நிரந்தரக் கவர்ச்சியுடையது.**
**கவர்ச்சியுடன் விலக்கும் திறனும் உடையது.**
**அதை நாம் தண்ணீர் அல்லது திரவம் என்கிறோம்.**
**இது தண்ணீர், ஜலம்.**
**ஐந்தாம் நிலையும் உண்டு.**
**அது ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையது.**
**அது கெட்டியானது.**
**நாம் அதை மண், பூமி என்கிறோம்.**
**இவை பூதங்களாகும்.**
**அவை அவசியம்.**
**இத்துடன் பட்டியல் முடிகிறது.**

***தொடரும்...***

## "ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்"

'மாலை நேர உரையாடல்களில்' ஸ்ரீ அரவிந்தர் தாம் சோம்பேறி என்று கூறுகிறார். பொதுவாக, காவியத்தில் நாட்டமிருப்பதால், பரீட்சை சமயத்தில்தான் படிப்பது வழக்கம் என்கிறார். ஸ்காலர்ஷிப்புக்காக ஸ்ரீ அரவிந்தர் எழுதிய கட்டுரைகளைக் கண்ட ஆஸ்கார் பிரௌன் என்ற ஆசிரியர் அது போன்ற அற்புதமான கட்டுரைகளைத் தாம் கண்டதில்லை என்றார். அதன் பிறகு ஆங்கிலப் பண்பு பற்றிப் பேச்சு திரும்பியது. அது பிரெஞ்சுப் பண்பையும் தொட்டது. அது சமயம் பகவான் ஸ்ரீ அரவிந்தரும், மற்றுமுள்ளவர்களும் கூறிய கருத்துகள் :-

- அந்த நாளில் இந்தியர்களைப் பற்றிய தப்பு அபிப்பிராயம் இங்கிலாந்தில் இருந்ததா?
- ஆங்கிலேயருக்கும், இந்தியருக்கும் எவரும் வித்தியாசம் பாராட்டுவதில்லை.
- தாழ்ந்த மக்கள் 'கருப்பன், கருப்பன்' என்று ஓலமிடுவார்கள்.
- அது இந்தியாவில் வசித்த ஆங்கிலேயர் (Anglo-Indians) கொண்டு வந்த பழக்கம்.
- அது ஜனநாயகத்தின் விளைவு எனக் கருதுகிறேன்.
- பண்பான ஆங்கிலேயரிடம் அது காணப்படாது.
- எங்களை அவர்கள் சமமாக நடத்தினர்.
- ஆனால் பிரான்சில் அப்பாகுபாடு கண்ணில் படாது.
- ஒரு பாரிஸ் ஹோட்டல் மானேஜரை 10 அமெரிக்கர்கள் சேர்ந்து அங்குத் தங்கியிருந்த நீக்ரோக்களை வெளியில் அனுப்பச் சொன்னார்கள்.



- பேப்பரில் அச்செய்தியை நீங்கள் படித்தீர்களா என எனக்குத் தெரியாது.
- பிரான்சில் நீக்ரோ கவர்னர்கள், ஆபீசர்கள் உண்டு.
- டாக்ஸி-டிரைவர்களாகவும் - நீக்ரோக்கள் - வேலை செய்கின்றனர்.
- செனகலீஸ் பார்லிமெண்ட் மெம்பர் கவர்னர்களை நியமிப்பது வழக்கம்.
- பாண்டியில் ஏன் இந்திய உறுப்பினரை நியமிக்கவில்லை எனத் தெரியவில்லை.
- ஆங்கிலேயருக்குச் சுதந்திர உணர்வும், common sense பொதுவான நல்ல குணமும் உண்டு.
- சுதந்திரம் என்றால் பெருந்தன்மையைக் குறிப்பிடவில்லை. மனதில் சுதந்திர உணர்வும் நேர்மை மனப்பான்மையும் உண்டு.
- இவற்றாலும், சேவா உணர்வாலும் அமெரிக்காவிலும், பிரான்சிலும் உள்ள குழப்பம் இங்கிலாந்திலில்லை.
- ஆங்கிலேயர் பத்திரிகைகளிலும், நேராகவும் ஒருவரை அடுத்தவர் தீவிரமாகக் குறை சொல்வார்கள். அது அவர்கள் நட்பைப் பாதிக்காது.
- Brailsford எப்படி Chamberlainஐத் தாக்கினார் என்று பார்க்கிறோம். அது அவர்கள் நட்பையும், உறவையும் பாதிப்பதில்லை.
- அது போலியன்று, உண்மை. இங்கிலாந்தில் உண்மையான பேச்சு சுதந்திரம் உண்டு.
- விவேகானந்தர் ஆங்கிலேயருடன் உறவாடி நட்புக் கொள்வது சிரமம், ஆனால் ஒரு முறை நட்பைப் பாராட்டினால் அது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் என்று கூறியது உண்மை.

❊ ❊ ❊

**Vol I P. 33** **To live in the truth one should rise above affirmation and negation. Tolerance is full of superiority. Truth is not successive but simultaneous.**

உண்மை என்பது என்ன என்றால் கண்ணால் கண்டதை உண்மை எனலாம். அதை ஆங்கிலத்தில் truth என்று கூறமாட்டார்கள். புலன் கண்ட உண்மை அது. தத்ரூபமான பொம்மை சற்று தூரத்தில் நிஜ உருவமாகத் தெரிகிறது. நாம் பார்ப்பது fact. அது பொம்மை என்பது truth. தகப்பனார் கூறும் பொய்யை மகன் நம்பினால், அடிப்படையில் அது பொய், மகனுக்கு அது தகப்பனார் கூறிய மெய் என்றால் it is a vital fact. அது தகப்பனாரின் உண்மை அதாவது தகப்பனார் கூறிய பொய்.

அப்படியானால் சத்தியம் என்பது எது?

கடைசிவரை ஆராய்ச்சியில் உண்மையாக இருப்பதே சத்தியம். ஒருவர் M.A. பாஸ் செய்ததாக சொல்கிறார். அவர் குரலில் பொய் தெரிகிறது. சிலர் நம்புகிறார்கள், சிலர் நம்பவில்லை. சர்ட்டிபிகேட்டை ஏற்கிறார்கள். ஒருவர் மனம் ஏற்க மறுக்கிறது. கொஞ்ச நாள் கழித்து அது பொய் சர்ட்டிபிகேட் எனத் தெரிகிறது. அப்பொழுது நம்ப மறுத்தவரை அனைவரும், "எப்படி நீங்கள் மட்டும் கண்டு கொண்டீர்கள்?" என்கிறார்கள். வந்தவர் சொல்வதையோ, அவர் சர்ட்டிபிகேட்டையோ நம்ப மறுத்தவர் மனத்திலுள்ள சத்தியம் ஏற்க மறுக்கிறது. மனத்தில் பொய்யுள்ளவர்கள் பிறர் பொய்யை ஏற்பார்கள். நாம் மனத்தில் வாழ்கிறோம். அடுத்த நிலை சத்திய ஜீவியம். சித் அடுத்தது. சத் முடிவானது. சத்தியம் சத் என்பதில் உள்ளது. எவருடைய மனம் சத் என்பதின் சத்தியத்திலுள்ளதோ அவர் உண்மையானவர்.



- *சத் என்பதன் புற உருவம் சத்தியம்.*
- *சத் காலத்தைக் கடந்தது என்பதால் நிகழ்ச்சிகள் இங்கு தொடராக இருக்காது. ஒரே சமயத்தில் நிகழ்வதாக இருக்கும்.*
- *பிறர் குறையைப் பெருந்தன்மையாகப் பொறுத்துக் கொள்வது உலகில் உயர்ந்தது என்றாலும், யோகத்திற்கு அதுவும் அகந்தையின் செயல்.*
- *Affirmation எனில் உண்டு எனப் பொருள், negation எனில் இல்லை எனப் பொருள். இவையிரண்டும் சிருஷ்டிக்குரியவை. சத்தியம் சிருஷ்டியைக் கடந்தது.*

புதியதாக ஒன்று வந்தால் நம்மவர் இரு கட்சியாகப் பிரிந்து ஒன்று ஏற்கும், அடுத்தது மறுக்கும். இருவரும் சத்தியத்தைச் சார்ந்தவரில்லை. ஏற்பும், மறுப்புமற்றது சத்தியம். புதியதாக வந்ததைக் கேட்டு ஆர்வமாக ஏற்காமல், வேகமாக எதிர்க்காமல் நடுவுநிலையிலிருக்க மனம் நிதானமாக இருக்கவேண்டும்.

- *நிதானமானவர் சத்தியத்திற்குரியவர்.*
- *நிதானம் மனத்திற்கில்லை.*
- *நிதானம் பெற மனத்தைக் கடந்தவராக இருக்கவேண்டும்.*
- *வாழ்வில் சத்தியத்தைக் கடைப்பிடிக்க நடுநிலையுள்ள நிதானம் தேவை.*

❋ ❋ ❋

## அன்பர் கடிதம்

ஸ்ரீ அன்னை அவர்களுக்கு,

நமஸ்காரம். ஸ்ரீ அன்னையை 'அமுதசுரபி' பத்திரிக்கையின் வாயிலாக 15 ஆண்டுகளாக அறிவேன். 'அன்னை'யை ஏற்றுக் கொண்டவுடன் என் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நடந்தேறின. 12 ஆண்டுகளுக்கு முன்பு இராமநாதபுரத்தில் ஒரு தொண்டு நிறுவனத்தில் பணி செய்தேன். அப்போது மதிப்பூதியமாக ரூ. 400 மாதா மாதம் அளித்தார்கள். கிராமங்களுக்குச் சென்று தொண்டுகள் செய்ய வேண்டும். அப்படி ஒரு கிராமத்திற்கு சென்று திரும்பும்போது பேருந்தைத் தவறவிட்டேன். 4 கி.மீ. நடந்து வந்துதான் பேருந்துகள் தொடர்ச்சியாக செல்லும் சாலையை அடைய வேண்டும். அச்சமயம் சாலையில் நடந்து கொண்டிருந்தபோது கட்டுவிரியன் பாம்பு ஒன்று சாலையில் கிடந்ததை நான் பார்க்கவில்லை. சாலையில் நடந்து கொண்டிருந்தேன். எதிர்ச்சாலையில் வந்து கொண்டிருந்த வேனின் ஹெட்லைட்டின் ஒளி பாம்பின் மீது பட்டது. பாம்பு சீறிக் கொண்டிருந்தது. வேனில் இருந்தவர்கள் இறங்கி பாம்பை அடித்துவிட்டார்கள். நல்லவேளை, அப்பாம்பை நான் மிதித்திருந்தால் என் நிலைமை என்ன ஆகியிருக்கும்? மனதிற்குள் அன்னைக்கு நன்றி செலுத்தினேன்.

நிரந்தரமான வேலை இல்லாமல் இருப்பது எவ்வளவு பெரிய துர்ப்பாக்கியம் என்பதை உணர்ந்தேன். அன்னையிடம் நிரந்தரமான வேலையைத் தாருங்கள் என்று மனதில் வேண்டினேன். சில நாட்கள் கழித்து ஒரு தனியார் பள்ளியில் இருந்து 'இண்டர்வியூ' வந்திருந்தது. அன்னையின் அருளால் அப்பள்ளியில் அதே 400 ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. அப்போது பி.எட். தபால் வழியில் படித்துக் கொண்டிருந்தேன். பிராக்டிகல் வகுப்பிற்காக 1 மாதம் விடுப்பு எடுத்தேன். விடுப்பு முடிந்து வந்தவுடன், சோதனையாக... நிர்வாகி என்னை அப்பள்ளியில் இருந்து வேறு பள்ளிக்கு மாற்றம்



செய்வதாகக் கூறினார். அன்னையை மனதிற்குள் வேண்டினேன். அன்னையை நம்பினோர் கைவிடப்படார் என்பது அனுபவ உண்மையாயிற்றே! அப்பள்ளியில் இருந்து மாறுதல் கிடைக்காமல், அப்பள்ளியிலேயே தலைமை ஆசிரியராக பதவி உயர்வு செய்யப்பட்டேன். தற்போது 10 ஆண்டுகளாக அப்பள்ளியில் அரசு ஊதியம் பெறும் ஆசிரியராக பணியாற்றி வருகின்றேன். அன்னையின் கருணையை என்னென்பது?

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆறுமாதக் குழந்தையான என் பையன் ஹரிஷுக்கு வயிற்றுப்போக்கும், வாந்தியும் ஏற்பட்டது. டாக்டரிடம் சென்று காண்பித்தும் எந்தப் பயனுமில்லை. நிமிடத்திற்கு நிமிடம் வயிற்றுப்போக்கும் வாந்தியும் அதிகமாகிக் கொண்டே வந்தது. டாக்டரிடம் நானும், என் மனைவியும் அழுதுவிட்டோம். டாக்டரின் மேஜையிலும் அன்னை படம் இருந்தது. அவரும் அன்னை பக்தர். அவர் ஆறுதல் கூறினார்.

மதுரையில் உள்ள பிரபல டாக்டருக்கு எழுதிக் கொடுத்தார். மதுரைக்குக் காரில் நான் சலைன் பாட்டிலை பிடித்துக் கொள்ள மனைவி மற்றும், தாயார், ஓர் உதவியாளருடன் சென்றோம். வழி முழுக்க மனைவியின் கண்ணீர் நின்றபாடில்லை. மதுரை டாக்டர் கைராசிக்காரர். அவரும் ஓர் அன்னை பக்தர். அன்னையின் புன்னகை தவழும் படம் அந்த மருத்துவமனையில் இருந்தது. அப்போதும் அன்னையிடம் பிரார்த்தித்துக் கொண்டேன்.

இரவில் தூங்கிக் கொண்டிருந்தேன். மங்கலான வெளிச்சம். திடீரென்று எழுந்தேன். அறை வாசலுக்கு அருகில் ஓர் உருவம் ஆசீர்வதிப்பதுபோல் எதற்கும் கவலைப்படாதே... நான் இருக்கின்றேன் என்று கூறுவதுபோல் தோற்றம். அன்னையின் திவ்ய தரிசனம் செய்யும் பாக்கியம் பெற்றேன். அன்னையின் அருளால் என் மகனின் நோய் 3 நாட்களில் முற்றிலும் குணமானது. நாங்கள் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம். என் மகனை மருத்துவமனையில் சேர்த்த

மறுநாள் என் தங்கைக்குக் கேரளாவில் வளைகாப்பு. என் பெற்றோர் போயாக வேண்டிய சூழ்நிலை, என் மாமியாரைப் போனில் தொடர்பு கொண்டு அழைத்தவுடன் அவர் கும்பகோணத்தில் இருந்து உடனே மருத்துவமனை வந்துவிட்டார். என் பெற்றோர்கள் வளைகாப்பிற்காகக் கேரளா சென்றனர்.

நான் வேலை பார்க்கும் பள்ளியில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கும் போது... அன்னையிடம் சரணாகதி அடைந்தால் அப்பிரச்சினைகள் சூரியனைக் கண்ட பனிபோல விலகிவிடும் என்பது அனுபவ உண்மை.

தற்போது என் குடும்பம் மட்டுமன்று, என் மாமியார் குடும்பமும் அன்னையை ஏற்றுக் கொண்டது. நம்பினோரைக் கைவிட மாட்டார் ஸ்ரீ அன்னை. இப்போது எச்செயலைச் செய்ய ஆரம்பித்தாலும் அன்னையிடம் வேண்டிக் கொண்டே செய்கிறேன். அன்னை வழி நடத்திச் செல்வார் என்ற பரிபூரண நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அன்னைக்குச் சமர்ப்பணம்!

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கட்டுப்பாட்டைத் தானே கற்றுக் கொள்வதில்லை. கட்டாயப்படுத்தினால் மட்டுமே நாம் அதை ஏற்கிறோம். கடுமையாகவோ, மென்மையாகவோ கட்டுப்பாட்டை வலியுறுத்த வேண்டும். வலியுறுத்தாவிட்டால் நாம் அதை ஏற்க மாட்டோம்.

*கட்டுப்பாடு தானே கட்டுப்படாது.*





## P. 12. It is the highest knowledge, but not the final one.

## உயர்ந்த ஞானமுண்டு; அதுவே முடிவான பிரம்ம ஞானமில்லை.

இதை விளக்குமுன் இதுபோன்ற பல உண்மைகளைக் கூறலாம்.

- சுப்ரீம் கோர்ட் முடிவான கோர்ட் என்பது உண்மை. ஆனாலும் அதுவே முடிவன்று. பார்லிமெண்ட் அதைக் கடந்த அதிகாரமுள்ளது.
- Ph.D. முடிவான பட்டம். பெரிய படிப்பு. அதைக் கடந்து படிப்புண்டு. பட்டங்களும் - D.Sc., D. Litt., LL.D. - உண்டு.
- நாட்டில் அரசன் வைத்ததே சட்டம் என்பது உண்மை. அவனும் தர்மத்திற்குக் கட்டுப்பட வேண்டும்.
- பிரதம மந்திரியே தலைவர். அவரைக் கடந்து ஜனாதிபதி உள்ளார்.
- ஜாதகம் கூறிவிட்டது. இனி மறுபேச்சில்லை. அருள் ஜாதகத்தைக் கடந்தது.
- போரில் இராணுவமே கடைசி கட்ட அதிகாரமுள்ளது. ஆனால் இராணுவம் மந்திரி சபைக்குட்பட்டது.
- இராணுவம் தோற்றால் அதுவே முடிவு. சர்ச்சில் தன் தைரியத்தால் தோற்ற இராணுவத்தை மீண்டும் போரிடச் செய்து வெற்றி பெற்றார்.
- பகவான் எழுதிய நூல்களில் தலை சிறந்தது Life Divine. சாவித்திரி அதையும் கடந்தது.

- வாழ்க்கையில் பணம் பேசும். பணத்தைக் கடந்து நியாயம் பேசும் நேரங்களை நாம் கண்டோம். எலக்ஷனில் பணத்தைக் கடந்து பல விஷயங்கள் பேசுகின்றன. அதில் ஜாதி ஒன்று.
- குடும்பத்திற்குத் தலைவன் கணவன். அவன் மனைவிக்குட்பட்ட நேரம் உண்டு.

இந்தப் பக்கத்தில் ஆன்மீக உண்மையை எடுத்துக் கூறும் பொழுது பெரிய ஞானத்தை எடுத்து பகவான் விளக்குகிறார். ஆனால் அதுவே முடிவானதில்லை எனவும் கூறுகிறார். இதை விளக்க பல பக்கங்கள் எழுத வேண்டும். ஆனால் ஒன்று மட்டும் சுருக்கமாகக் கூறலாம்.

- *பிரம்மம் அனந்தம் என்பதால் அதை அறிய முயலும் ஞானமும் அனந்தமானது என்றாகுமன்றோ?*
- *அதனால் எந்த நிலை ஞானமும் முடிவானதெனக் கூறிவிட முடியாதன்றோ?*

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு ஜென்மத்தில் அறிந்து பெற்ற விவேகம், சாதாரண மனிதனுக்குப் பழமொழியாகக் கேட்கிறது.

இது சூத்திரம்போல், விவேகத்தின் வெளியுறையாக, வழக்குச் சொல்லாக மாறுகிறது. விவேகி, தன் முழு முயற்சியால் அறிவில்லாதவனுக்கோ, மற்ற எவருக்கோ இதற்கு மேல் சொல்ல முடியாது.

*விவேகம் என்ற முழு மனிதனின் ஓர் ஆடை பழமொழி.*



**Consultancy**

# "3 மணிக்கு மதிய உணவு"

ஜான் கம்பெனி முதலாளி. வேலை அதிகம். ஆனால் சாப்பாடு நேரம் தவறுவதில்லை. புதிய மானேஜ்மெண்ட் முறைகளைக் கற்க ஆரம்பித்தார். அவை நாட்டில் பரவலாகப் பின்பற்றப்படுகிறது.

- வாடிக்கைக்காரர்களை மறுத்துப் பேசக் கூடாது!
- அவர்கள் அபத்தமாகப் பேசினாலும், அதனுள் உள்ள இம்மியளவு உண்மையை எடுத்துக் காட்டிப் பாராட்ட வேண்டும்!
- $10க்கு வாங்குபவரிடமும், $1000க்கு வாங்குபவரிடம் காண்பிக்கும் கவனம் வேண்டும்.
- வருகின்ற வாடிக்கைக்காரர்களைக் கடையில் உள்ள அத்தனை பேரும் அவரவர் சந்திக்கும்பொழுது பெரிய வரவேற்பு அளிக்க வேண்டும்.

பட்டியல் நீண்டது. இவையெல்லாம் அவர்கள் நாட்டில் உண்டு என்றாலும் சற்று அதிகப்படியாகப் பின்பற்ற வேண்டும் எனில் கஷ்டமாக இருப்பதுடன், மனம் கசந்து போகும். ஏர்ஹோஸ்டஸ் சில கம்பெனிகளில் உள்ளே வரும் பயணிகள் ஒவ்வொருவரையும் பார்த்து புன்னகை செய்ய வேண்டும். விமானத்தை விட்டு இறங்கும் பொழுதும் மீண்டும் புன்னகை, மனத்திலில்லாத புன்னகையை வரவழைத்துச் சிரிக்க வேண்டும் என்பது தண்டனை. 300 முறை செய்வது கொடுமை. இவர்கள் வீட்டில் சிரிப்பதே இல்லையாம். இவர்கட்கெல்லாம் சிரிப்பின் மீதே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. வாய் வலிக்கிறதாம்!

ஜீவனற்ற இனிமை வாடிக்கைக்காரர்கட்குப் பிடிக்கிறது. வியாபாரம் அதிகமாகிறது. விற்பவருக்கு உள்ளே உயிர் போகும். எல்லா இடங்கள்போல அன்னை இங்கும் மாறிச் செயல்படுகிறார்.

ஜான் கடையில் $500,000 முதல் $750,000 மாதத்தில் விற்கும். அதிகபட்சம் சில நாட்களில் 40 அல்லது 60 ஆயிரம் விற்கும். குறைந்தபட்சம் 1 ஆயிரமும் விற்பனை இருப்பதுண்டு. கடையில் 50, 60 பேர் வாடிக்கைக்காரர்கள் வந்தால் 10 அல்லது 15 பேரே வாங்குவார்கள். $1000 சேல்ஸ் பெரியது. ஒருவர் 5000 அல்லது 8000த்திற்கு வாங்கினால் அது விசேஷம். ஜான் அன்று காலையில் புதியதாய் கற்றுக் கொண்டது,

"எவ்வளவு நேரம் வாடிக்கைக்காரர் இருக்கிறார் - 1 மணி, 2 மணியும் இருப்பார்கள் - எவ்வளவுக்கு வாங்குகிறார், வாங்கவில்லையா என்பவற்றைப் பொருட்படுத்தாமல், வந்தவர் மனம் இனிக்க வேண்டும், அவருக்குத் தேவையானது இருக்கவேண்டும், அவரைச் சந்தோஷப்படுத்துவதே என் சந்தோஷம். வியாபாரம் மறந்துவிட வேண்டும்."

இது அன்னை முறை. ஜான் ஏற்றுக் கொண்டதன் பலன் அன்று 1 மணி சாப்பாடு 3 மணியாயிற்று. கையில் toast டோஸ்ட்டை எடுத்து வாயில் வைத்தார். ஒரு வாடிக்கைக்காரர் "ஜானைப் பார்க்கவேண்டும் என்கிறார்" என்று செய்தி. உடனே அவரைக் கவனிக்க வேண்டும். சாப்பாட்டை நினைக்கக் கூடாது என்றால் பசிக்கிறது. சாப்பாடு ஆறிப் போனால் சாப்பிட முடியாது. அவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை என்றால் 3 மணிக்குச் சாப்பாட்டைவிட்டு இவரைக் கவனிக்கப் போனால் எப்பொழுது சாப்பிடுவது? அதையும் பொருட்படுத்தவில்லை என்றால் அதை எப்படிச் சந்தோஷமாகச் செய்வது? ஜான் ஒரு நிமிஷம் எழுந்து நின்றார், "சாப்பாடு முக்கியமில்லை. வாடிக்கைக்காரர் முக்கியம். அதைவிட சந்தோஷம் முக்கியம்" என்று நினைத்தார். மனம் மலர்ந்தது, போனார், வந்தவரை சந்தித்தார். 1 மணி நேரத்திற்கு மேல் அவர் T.V., speaker என பல பொருள்களைப் பார்வையிட்டார். வாங்கினார்.

- ***அவர் அன்று $ 100,000க்கு வாங்கினார்.***

❈ ❈ ❈



## ***வாழ்வில் சிருஷ்டியின் இரகஸ்யம்***

எந்த மனிதனும் அடுத்தவரை ஓரளவு நம்பி வாழ்கிறான். அந்த நம்பிக்கை அடிப்படையானது. அது குடும்பம், நட்பை நம்புவதாகும். தூரப் போனால் ஊர், சட்டத்தை நம்புவதாகும். நெருங்கி வந்தால், பெற்றோர், கணவன், மனைவி, மக்களை நம்பும் நம்பிக்கையாகும். எவர் வாழ்விலும் இந்த நம்பிக்கைகளில் உண்மையில்லை என்ற நேரம் எழுவதுண்டு. நம்பிக்கை போனபின் மனிதன் அழிவான். பிள்ளைகளை நம்பிய தாயார் நம்ப முடியாது என்று கண்ட நேரம் மகனுடைய அலட்சியத்திற்கும், மருமகளுடைய கொடுமைக்கும் ஆளாவாள். அந்த நேரம் உன்னை நம்பி நானில்லை. என்னால் முடியும், என்னாலும் வாழ முடியும் என்ற பக்திபூர்வமான நம்பிக்கை அல்லது தன்னம்பிக்கை எழுவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் அழிக்கப்படுவதில்லை. கொடுமைக்கு ஆளாவது இல்லை. உள்ளிருந்து தெம்பு எழும். நிலைமை மாறும். அவர்கள் எண்ணம் நிறைவேறும். அவர்களை அசைக்க முடியாது. அது நம்பிக்கை. தன்னம்பிக்கையாகவோ, தெய்வ நம்பிக்கையாகவோ இருக்கும். அது அன்னை மீதுள்ள நம்பிக்கையானால் அதற்கு அழிவில்லை. தோல்வியில்லை. அப்படி உள்ளே எழுவது உள்ளுறை தெய்வம். அதைத் தொடர்ந்தால் ஜீவாத்மா, பரமாத்மா, That, சைத்திய புருஷனைக் காணும் பாதை அது.

- ***ஊரும், உலகமும், உற்றாரும், உரியவரும் கைவிடும் நேரம் மனிதன் நிலை குலைந்து புறச்சூழலுக்குக் கட்டுப்பட்டு அடங்கினால், அவன் கொடுமைக்குட்பட்டு அழிகிறான்.***
- ***அனைவரும் கைவிட்ட நேரம் இதுவே முடிவன்று என்ற தெளிவுள்ளவனுக்கு அவன் ஆத்மா வெளிவந்து நிலைமையை தலைகீழே மாற்றும். அது அன்பருக்கு அன்னை வாழ்வில் வெளிப்படுவதாகும்.***

அப்படி நிலைமை சமாளிக்கப்பட்ட நேரம் பிரச்சினையான விஷயங்கள் தீர்வதும், புதிய காரியங்கள் உற்பத்தியாவதும் உண்டு. தங்கள் வாழ்வை அவர்கள் இன்று நினைவுபடுத்திப் பார்த்தால், நடந்த விஷயங்கள் எப்படி உருவாயின என்றால், அவை மறந்திருக்காது. அது நடந்து முடிந்த பாதை கீழ்க்கண்டவாறு இருக்கும்.

| | | |
|---|---|---|
| ◆ மனம் நிலை குலையாமல் தெளிந்த பின் தெம்பு பிறக்கும். | Being | சத் புருஷன். |
| ◆ பிறகு அந்தத் தெம்பு என்ன என்று தெளிவுபடும். | Consciousness | தன்னையறிவார். |
| ◆ தெளிவைச் செயல்படுத்த உணர்வு துடிக்கும். | Ananda | காரியம் செய்ய ஆர்வம் எழும். |
| ◆ எப்படிச் செய்வது, எதைச் செய்வது என்ற தெளிவு விவரமான தெளிவாக எழும். | Supermind | ஒரு முடிவு பிறக்கும். |
| ◆ அது அறிவாகவும், உறுதியாவும் பிரியும். | knowledge, will of mind | தெளிவு, உறுதியாகும். |
| ◆ அறிவு உறுதியைத் தெளிவுபடுத்த சக்தி எழும். | knowledge releases energy from will (Life) | உறுதி தெளிவால் உற்சாகப் படும். |
| ◆ தெளிவு மறைந்து உறுதி செயல் ஆகும். | knowledge disappears to create Matter | அறிவு மறைந்து காரியம் பூர்த்தியாகும். |



அப்படி முன்னுக்கு வந்தவர்களைக் கேட்டால், இன்று என் சொத்து உங்களுக்குத் தெரிகிறது. இதற்கு நான் பட்டபாடு யாருக்குத் தெரியும் என்பார்கள். அது பெரிய பாடு. It is the process of creation. இதுவே உலகம் சிருஷ்டிக்கப்பட்ட முறை. ஸ்ரீ அரவிந்தம் கூறுவது. ரிஷிகள் அறியாதது. பொறுப்பு இல்லாத கணவன் 32 வயதில் பெண்ணுக்குத் திருமணம் செய்ய தன்னால் முடியாது என்ற பின் மனைவி அதை முடித்தாள் என்றால், அவள் சென்றது மேற்சொன்ன பாதையாகும். இது அன்றாடம் நம் வாழ்வில் நடப்பது. அழிபவர்கள் ஏராளம். அழிய மறுப்பவர்களும் ஏராளம். சொந்தத் தெம்பால் @YoLs **தங்கள் உலகத்தை சிருஷ்டித்தவர்கள். அவர்கள் உலகத்திற்கு அவர்களே பிரம்மம்**. தாங்கள் செய்ததை விவரமாக அறிந்தால் அவர்களுக்கு இதுதான் சிருஷ்டியின் இரகஸ்யம் எனப் புரிந்தால், அவர்களால் அவர்கள் வாழ்வில் எதையும் சிருஷ்டிக்க முடியும். தங்கள் அதிர்ஷ்டத்தைத் தாங்களே நிர்ணயம் செய்து பூர்த்தி செய்யும் திறன் அவர்கட்குண்டு.

- ***நிலைமை மோசமாகி நம்ப வேண்டியவர் கைவிட்ட பின் எழுவது தெய்வம்.***
- ***அப்படி எழும் தெய்வம் நம் மனநிலைக்குரிய தெய்வமாக இருக்கும்.***
- ***எளியவனுக்கு வாழ்வு பிரச்சினை.***
- ***அதைச் சாதிக்க முயன்றால் வாழ்வுக்குரிய தெய்வம் ஆவேசமாக எழும். காரியத்தைச் சாதிக்கும்.*** **It is vital power, solving the problems.**
- ***டாக்டர் கைவிட்ட பின் உடல் சாக மறுத்தால் உடலின் சக்தி எழுந்து வியாதியைக் குணப்படுத்தும்.*** **It is the force in the body expressing physical energy.**
- ***என்ன நடந்தது, ஏன் என்னை அண்ணன் கைவிட்டு விட்டான் என யோசனை செய்து அதனால் எழும் சக்தி மனத்திற்குரியது.*** **It is the force of mind.**

- **மனத்தின் சக்தி தவறும் நேரம் நம்பிக்கை தவறவில்லை என்றால் சாட்சிப் புருஷன் வெளிப்படுவான். தொடர்ந்தால் ஜீவாத்மாவும், பரமாத்மாவும், பிரம்மமும் வெளிப்படும்.**

தவத்தால் இதுபோல் சத் புருஷனை அடைவதையும், சத், சக்தி என்றறிவதையும், சத்திலிருந்து சித் என்ற சக்தி எழுவதையும், அது ஆனந்தமாக அடுத்த கட்டத்தில் மாறுவதும் Life Divine இல் 9, 10, 11, 12 அத்தியாயங்கள். பரவலான சக்தியைக் குறிப்பிட்ட நிகழ்ச்சியாக மாற்றுவது Maya மாயை என்பது. அந்த சிருஷ்டியின் பொறுப்பை ஏற்பது சத்திய ஜீவியம். சத்திய ஜீவியம் உலகை சிருஷ்டிக்க காலம், இடத்தை சிருஷ்டித்தது, செயல்களைக் காலத்தால், இடத்தில் நிகழ வைக்கிறது. காலத்தால் ஏற்பட்ட நிகழ்ச்சி இடத்தில் வெளிப்படும் சட்டம் causality காரணம் காரியமாவது.

ஆண்டவனுடைய சிருஷ்டி அவனுள்ளே உற்பத்தியாகிறது. உள்ளே சிருஷ்டிக்கப்பட்ட உலகை எடுத்து வெளியே கொண்டு வந்து ஆண்டவன் முன் இரண்டாம் பேர்வழியாக நிறுத்தும்பொழுது, அதைக் காண, அவற்றிடையே - ஆண்டவனுக்கும் சிருஷ்டிக்கும் இடையே - மனம் உற்பத்தியாகிறது. மனம் சிருஷ்டியைக் காண்கிறது. திரும்பிப் பார்த்தால் ஆண்டவனைக் காணலாம். ஒரு சமயத்தில் மனத்தால் ஒன்றையே ஆண்டவனை, அல்லது சிருஷ்டியை மட்டும் காண முடியும். இரண்டையும் ஒரே சமயத்தில் மனத்தால் காண முடியாது. சத்திய ஜீவியத்தால் காண முடியும்.

மனம் என்பது அறிவு, உறுதி என்று இரு பிரிவுகளாலானது. அறிவு உறுதி மேல் செயல்பட்டால், உறுதிக்கு உற்சாகம் எழும். அறிவு தன்னை உறுதியில் முழுவதும் இழந்துவிட்டால் உற்சாகம் காரியமாக முடியும்.

- **இதற்கு மேல் அநியாயமில்லை என்று வந்த பின் அழியாத நம்பிக்கை நிலைமை மாறும் புதுச் செயலை ஏற்படுத்துவது ஆண்டவன் செயல், அன்னை செயல்.**



- **அதன் பிறகு அறிவும் தெளிவும் உறுதியைத் தயார் செய்து காரியத்தைப் பூர்த்தி செய்வது நம் வாழ்வுக்கு சிருஷ்டி போன்றது.**
- **கணவனுக்கு வேலையில்லை என்பதால் கொடுமைக்கு ஆளானவள் நம்பிக்கை அழியாதபொழுது வேலை கிடைப்பது அன்னை செயல். இதுபோன்ற செயலைப் பார்க்காத அன்பரில்லை.**
- **அதிலிருந்து, கொடுமையிலிருந்து விடுதலை பெற்ற விவரம் சிருஷ்டிக்குரிய முறை.**
- **சொந்த அனுபவத்தில் அம்முறையைக் காண்பது** to know it consciously **சிருஷ்டியின் முறையை அறிவது.**
- **அதை** Life Divine**இல் படிப்பது தத்துவம்.**
- **வாழ்வில் பார்ப்பது அனுபவம்.**
- **தத்துவத்தை அனுபவத்தில் காண்பது சிருஷ்டி. அதுவே முதல் 28 அத்தியாயத்திற்குரிய கருத்து.**

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம் கேட்பதை, தாங்கள் மகிழ்ந்தபொழுது தெய்வங்கள் நமக்கு வரமாக அளிக்கின்றன. பிரம்மம் தன்னிடமிருந்து எதையும் மனிதன் தன் திறமையால் பெறுவதை அனுமதிக்கிறது. அன்னை நம்மால் பெற்றுக் கொள்ள முடிந்த அத்தனையையும் நமக்களிக்க ஆர்வமாக இருக்கின்றார்.

- *கேட்பதைக் கொடுக்கும் தெய்வம்.*
- *எதைப் பெறவும் அனுமதிக்கும் பிரம்மம்.*
- *பெறும் அளவுக்கு தரும் அன்னை.*

## "அவன் குறையுள்ளவன்"

வருஷத்தில் கோடி ரூபாய் சம்பாதிக்கும் ஹாலிவுட் டைரக்டர் கருமி. தம்முடன் சாப்பிட ஒரு சிறுவனை ஒரு நாள் அழைத்திருந்தார். அவன் சாப்பிட ஆரம்பிக்கு முன். "நிறைய சாப்பிடாதே". நான் அதிக பில் கொடுக்க வேண்டி வரும் என்றார்! கருமியின் விருந்துபசாரம் இது.

40 வயதில் மனைவி அவரை விட்டுப் போய்விட்டாள். சில வருஷங்கள் கழித்து குழந்தைகள் படிப்பை முடித்துவிட்டு அவரை விட்டுப் போய்விட்டனர். தம் 40ஆம் வயதில் அன்னையை அறிந்தார். கடந்த 15, 17 வருஷங்களாக ஆண்டுக்கு ஒரு முறை ஆசிரமம் வந்து தங்குவார். தாம் சம்பாதித்த பணத்தை எல்லாம் தாம் இப்பொழுது எடுக்க முடியாத நிதியில் போட்டுவிட்டு, கடந்த 10 வருஷமாக வேலையை விட்டுவிட்டு, புதிய பெண்களுடன் - 2 வருஷத்திற்கு ஒருவராக - வாழ்ந்து வருகிறார். பெருஞ்செல்வம் நிதியிலுள்ளது. அவர் 15 ஆண்டுகளாக ஆசிரமம் வருவதில் அவர் பெற்றதாக அறிபவை பல,

1. அவர் படித்த அமெரிக்க M.A. பட்டத்தில் அறியாத வாழ்வு ஞானம் Life Knowledge.
2. இப்பொழுது ஹடயோக ஆசனங்கள் பயில்கிறார்.
3. எந்த வருமானமுமில்லாதபொழுது கவலையில்லாமல் வாழ்க்கை நடக்கிறது.
4. சேமிப்பு நிதியில் அவர் முதலீடு செய்த பணம் அவர் கற்பனையின் உச்சம் எதிர்பார்த்ததை விட இரு மடங்கு பெருகியது.
5. தகப்பனாருக்குப் பின் வர வேண்டிய தகப்பனார் சேமிப்பிலிருந்து ஒரு பகுதி இப்பொழுதே வந்தது.



இவர் ஸ்ரீ அரவிந்தரை ஏற்றுக் கொண்டவர். ஆனால் ஹடயோக ஆசனம் செய்கிறார்! அமெரிக்காவில் எந்த ஊரிலும் புதியதாக religious movement யோக சம்பந்தமான சிறு கூட்டங்களுண்டு. அதுபோல் பல ஆயிரம் உண்டு. அங்கு சில நூறு பேர் சேர்வார்கள். ஆரம்பித்தவர் தலைவராக இருப்பார். அந்தத் தலைமைப் பதவி, சில நூறு பேர் தம்மைத் தலைவராக குருவாக ஏற்பது பிறவியில் தலைவராகப் பிறந்தவர்க்கேயுண்டு. அதுபோன்ற ஒரு கூட்டத்தில் சேர்ந்தார். அன்னையிடமிருந்து தாம் பெற்ற ஞானம் பெரிதெனினும், அதை நடைமுறைப்படுத்தும் திறமை இவருக்கில்லை. கூட்டத் தலைவர் அது போன்ற கருத்துகளை கவனமாகக் கேட்பார். சிலவற்றை ஏற்பார். அதனால் அன்பருக்கு நிலை உயர்ந்தது. அத்துடன் ஆசையும் வளர்ந்தது. சொல்ல வெட்கம். தலைவர் உடல் நலம் குன்றுவதால், அவருக்குப் பின் தாமே தலைவராக வரவேண்டுமென்று ஆசை. இவருக்குப் பின் போட்டி பலமாக இருக்கும். அவருடன் நெடுநாளாக இருந்த பலர் விரும்பும் நிலை அது. இவர் சமீபத்தில் வந்தவர்.

இந்த ஆண்டு சமாதிக்கு வந்தபொழுது 7 நாள் தினமும் 1 மணி நேரம் அந்த ஆசையைச் சமர்ப்பணம் செய்தார். முழுவதும் விலகியதாக உணர்ந்தார். திரும்பிப் போனார். ஒரு பெண் இவரை அணுகி, "தலைவருடன் பேசினேன். உங்களைச் சுற்றி ஒரு கறுப்புள்ளது என்றார்" என்று கூறினார். தாம் விலகியதாக நினைத்தது இன்னும் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டார். மீண்டும் சமர்ப்பணத்தைத் தொடங்கினார். மனப்பாரம் குறைந்தது. ஒரு நாள் பாரம் விலகியது. தலைவர் உடல் நலம் மிகவும் குன்றிய நிலையில் இவருக்கு அழைப்பு வந்தது,

**எனக்குப் பின் நீயே தலைவன். உன்னை நானே நியமிக்கிறேன். இப்பொழுதே தலைமையை ஏற்று இயக்கத்தை நடத்து என்ற வேண்டுகோளை விடுத்தார்.**

* * *

## P. 19. At the unseen's knock upon her hidden gates

### மறைபொருளான கதவில் கண்ணுக்குத் தெரியாமல் தட்டுவது

உலகில் ஒரு சிறு வேதனையுமில்லை. ஒரு க்ஷணம் கூட மனிதன் துன்பம் அனுபவிக்கத் தேவையில்லை என்ற ஸ்ரீ அரவிந்தம், அத்துன்பங்கள் உற்பத்தியான வகையை விளக்கி, அதிலிருந்து சாவித்ரி உலகைக் காப்பாற்றும் முறையை மனிதனுக்குரிய சொல், தெய்வத்திற்குரிய மந்திரம், யோகிக்குரிய தந்திரம், கவிக்குரிய உருவகம், திருஷ்டியுள்ளவர் காணும் அற்புதம், எதுவும் அறியாதவர்க்குரிய குருட்டுப் பார்வை ஆகிய பல வழிகளில் செய்யுளாக வகுத்தது சாவித்ரி. அவற்றுள் உள்ள சில சொற்றொடர்களைக் கீழேயும், முதன்மையானதைத் தலைப்பாகவும் இங்குக் காண்கிறோம்.

வலியிலிருந்து விடுபட மனிதனுக்குக் கதவுண்டு.
கதவைத் தட்டி எழுப்பும் அருள் உண்டு.
கதவு மறைந்துள்ளது.
தட்டும் குரல் காதுக்கோ, கண்ணுக்கோப் புலப்படாது.

புலனுக்குப் புலப்படாதது, தேடும் மனிதனுக்குத் தென்படும் என்ற சட்டம் வாழ்வுக்கும், யோகத்திற்கும் உண்டு என்று தெரிவிக்கும் வரி முதலில் கூறியது.

- இறவாத இலட்சியங்களை மரணத்தில் தேடுபவள்.
- உலகத்தை வாழ்வில் நிர்ணயிப்பவள்.
- அவள் பேச வேண்டிய சொல், செய்ய வேண்டிய செயலுண்டு.



- வலி போக வேண்டும் எனும் வலிமையற்ற மனித இதயமன்று.
- இறைவனின் ஊற்றுகளை இதமாக இதயத்தில் கண்டவள்.
- ஜோதிமயமான புத்தகத்தை மூட சம்மதிக்காதவள்.
- பிரபஞ்ச சாம்ராஜ்யத்தை எதிர்த்து நின்ற தனி மனுஷி.
- மின்னல் தாக்கினால் மிளிர்ந்த வலிமை.
- இருளின் தேவதைகளை மறுப்பின்றி ஏற்பவர்.
- கடந்த காலச் சட்டத்தைப் பணிந்து ஏற்கும் பாங்கு.
- மனம் மகிழ்ந்து பணிகிறது.
- விதியின் வேதனைக்கு திறந்து காட்டிய நெஞ்சம்.
- காலத்தின் கதிக்கும் வணங்காத முடி.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**சரணாகதியே பகவான் கண்டுபிடித்த பெரிய சூட்சுமம்.**

சிருஷ்டியிலும், மனித வாழ்விலும் தன்னையே முதன்மையாகக் கருதுவதே வழக்கம். இயலாமை வந்த பின் மனிதன் சரணடைகிறான். குழவிப் பருவத்திலும், தன் வலிமையை இழந்த நேரத்திலும் தவிர மனிதன் தன்னையே முதன்மையாகக் கருதுகிறான்.

*சரணாகதி சர்வேஸ்வரனுடைய சூட்சுமம்.*

## எது நியாயம்

*இல. சுந்தரி*

“அப்படீன்னா? உனக்கு எம்மேல அன்பில்லையா?” என்றான்.

“நெறய இருக்கு. அத்தோட நம்பிக்கையுமிருக்கு, எம் புருஷன் நல்லவரு. நேர்மையானவரு. அவருக்கு சாமி துணையிருக்கும்னு” என்றாள்.

“எனக்கு இந்த சாமி பூதமெல்லாம் நம்பிக்கையில்ல. சாமியிருக்குன்னா அக்கிரமங்களை ஏன் வேடிக்கை பாக்குது?” என்றான்.

மேலேழுந்தவாரியா பார்த்து எதையும் முடிவு செய்யக்கூடாது. அக்கிரமம்னு நாம் எதை நினைக்கிறோம். ஏன் நெனைக்கிறோம்னு எல்லாம் பாக்கணும்” என்றாள்.

“அது சரி. கூலி வேலை செய்ய இருபது ரூபா பேசி பத்து ரூபா கொடுத்து இதுதான் முடியும் ஒன்னால் ஆறத பாத்துக்கன்னு ஒத்தன் மனசை சீண்டறது தப்பில்லையா?” என்றான்.

அதான் சொன்னேனே. மேலோட்டமா பாத்து தப்பு, தப்பு இல்லைங்கறத முடிவு செய்யக்கூடாது.

“இதுல மேலோட்டம் என்ன? சொன்னது 20 ரூபா. கொடுத்தது 10 ரூபாய. தப்பில்லையா?” என்றான்.

“சரி சரி. ஒங்க மனசுக்கு நியாயம்னு தோண்றத நீங்க செய்யறீங்க. அது தன்னலம் இல்ல. அதனால் அது தப்பில்ல. அவ்வளவுதான்.”

“ஆக என் செயல நீ ஒத்துக்கலையா?”

“ ஒங்களுக்காக சாமியை வேண்டுறதுதான் என் தர்மம். அதை நான் தவறாமல் செய்வேன்” என்றாள்.



எப்படியோ, என் மீது வருத்தமில்லை உனக்கு அது போதும் எனக்கு என்றான்.

மறு நாளிரவு. மணி ஒன்பதாகியும் வரவில்லை. அம்மா புலம்பினாள். வேதாளம் மறுபடியும் முருங்க மரம் ஏறின கதைதான் என்றாள்.

நாலு பேர் அவனைக் கைத்தாங்கலாய்ப் பிடித்து வந்து வீட்டில் சேர்த்துவிட்டு புள்ளய பாத்துக்கம்மா என்று சொல்லிப் போனார்கள். அம்மா பதறினாள். கண்ணம்மா பதறவில்லை. நிதானம் இழக்கவில்லை. அவனைத் தாங்கிப் பிடித்து கட்டிலில் படுக்க வைத்தாள். காயத்தைக் கழுவி மருந்திட்டாள். குடிக்க சூடாய் ஏதோ கொடுத்தாள். இதமாயிருந்தது. பிறகு சோறு கலந்து வந்து உண்ணச் செய்தாள். படுக்க வைத்துக் கால் பிடித்து விட்டாள். எதுவும் பேசவில்லை. சுகமாக உறங்கிப் போனான்.

அம்மா தவித்தாள். என்னைக் கலக்கியதோடு இந்தச் சின்னப் பெண்ணையுமல்லவா கலக்குகிறான் என்று புலம்பினாள். அவளோ சிறிதும் பதறாமல் வாய் பேசாது தன் வேலைகளைச் செய்த வண்ணமிருந்தாள்.

“ஒம் புருஷனுக்குப் புத்திமதி சொல்லக்கூடாதா?” என்றாள் கடுமையாக.

அவள் அதற்கும் வாய் பேசவில்லை.

கணவன் காலையில் கண் விழித்தான். சோர்வு நீங்கியிருந்தது. வழக்கம்போல வேலைக்குப் புறப்படத் தயாரானான். மனைவி நேற்றிரவு நடந்ததை மனதில் வைத்து ஏதேனும் கோபமாய்ப் பேசுவாளோ என்று எண்ணினான். இல்லை புன்னகை மாறாது அனுப்பி வைத்தாள். என்ன இது வியப்பாயிருக்கிறது. மறுநாளும் அப்படியே நடந்தது. அவள் மருந்திட்டாள், உணவூட்டினாள். கால் பிடித்தாள்.

மாமியார் பதறினாள். "சரிதான் நீ ஏதாவது சொல்லித் திருத்துவேன்னு பாத்தா நீ வேற ஆதரவாயில்ல நடக்கிற?" என்றாள் அம்மா.

"அவரே துன்பப்பட்டு வரும்போது நானும் அவரைத் துன்பப்படுத்த வேண்டுமா? கடவுளை அவருக்காகத் துணையிருக்க வேண்டுகிறேன்" என்றாள் கண்ணம்மா.

"அது சரி. புருஷங்காரன் அடியும் உதையும் பட்டு வரானேன்னு உனக்குக் கவலை இருந்தாத்தானே? நீ சொகமா வீடு வாசல் கெடச்சுதுன்னு உண்டு ஒறங்கிற" என்று ஆத்திரப்பட்டாள்.

அவள் பதிலேதும் கூறாமலிருந்தாள். குமரனுக்கு சங்கடமாயிருந்தது. பாவம் கண்ணம்மா. என் செயலுக்கு அவள் என்ன செய்வாள். அவளையேன் அம்மா பேசவேண்டும் என்று தவித்தான். மனைவிக்கு எதிரே தாயை அடக்கினால் தான் தாயை விட்டுக் கொடுத்துவிட்டு மனைவி பக்கம் சேர்ந்து கொண்டேன் என்று கற்பனை செய்து துன்புறுவாள் என்று பேசாதிருந்தான்.

கண்ணம்மாவிடம் தனியாக, "அம்மா சுபாவம் அது, நீ ஒண்ணும் மனசில் வச்சுக்காத" என்றான்.

"அவங்க வேதனை அவங்க பேசறாங்க. அவங்க நெலல நா இருந்தா நானும் இப்படித்தான் பேசுவேனோ என்னமோ, இதுல வருத்தப்பட என்னயிருக்கு. அவங்க ஒங்களுக்கு மட்டும் அம்மாயில்ல. எனக்கும்தான் அம்மா" என்றாள்.

இவளுக்கு உணர்வேயில்லையா? கல்லும் மண்ணும் கலந்து செய்யப்பட்டவளா? யார் எது சொன்னாலும் பொறுத்துப் போகிறாளே. இந்தப் பொறுமையில்லாமல்தான் நான் துன்பப்படுகிறேனா என்று ஒரு கணம் நினைத்தான். சரி சரியென்று வெளியேறினான்.

மறுநாள் நோயாளிக் குழந்தையுடன் தவித்த தாய்க்கு உதவி செய்யப்போய் விடிய விடிய வரவில்லை. இவன் தாய் புலம்பி நின்றாள். கண்ணம்மா கலங்காது கடவுளை நினைத்தவண்ணம் உறங்காது விழித்திருந்தாள்.



காலை 6 மணிக்குத்தான் வந்தான். "கண்ணம்மா!" என்றான்.

வாங்க என்று எழுந்து வந்தவள் அவனுக்குக் காபி கலந்து எடுத்து வந்து கொடுத்தாள்.

அம்மாவுக்குக் கோபம். "லேட்டா வரவனை ஏன்னு ஒரு வார்த்தை பேசாம ஏன் காபி கொடுத்து உபசாரம் பண்ற. இவன் இப்படி இருக்கானே. திருந்தணும்னுதான் ஒன்னைக் கட்டி வச்சேன்" என்றாள்.

அதற்கும் கண்ணம்மா ஒன்றும் பேசவில்லை. கணவன் கொடுத்த காலி டபரா டம்ளரைப் பரிவுடன் பெற்று எடுத்துப் போனாள்.

ஏன் கண்ணம்மா? என்னாலதானே ஒனக்கு இந்தப் பேச்சு என்று ஆறுதலாகக் கேட்டான்.

*தொடரும்...*

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சக்தி, திறமை, உரிமை, செல்வம், சந்தோஷம் ஆகியவற்றிற்காக மனம் ஆர்வம் கொள்வதைவிட ஆசை, மரியாதை, புகழுக்காக மனித மனம் அதிகமாகத் துடிக்கும். இவை அகந்தையின் அம்சங்கள்.

*பலனை விட மனம் தோற்றத்திற்காகத் துடிக்கும்.*

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - அஜெண்டாவில் அன்னை என்ன சொல்கிறார்?

அண்ணன் - யோகம் என்பது மேலே போவது, பூரண யோகம் மேலும், கீழும் போவதன்றோ?

தம்பி - வாழ்வை ஏற்பதைத் தானே கீழே போவது என்று கூறுகிறீர்கள்.

அண்ணன் - ஆமாம். இதுவரை செய்த யோகமெல்லாம் மேல் மனத்தின் யோகம். பூரண யோகத்தை மேல் மனத்தினின்று செய்ய முடியாது. உள்ளே போய் செய்ய வேண்டும். உள்ளே (subliminal) அடி மனம் போவதை descent கீழே போவது என்கிறார். இதுவரை யோகம் அகந்தையின் சாதனை, இனி அகந்தையை அழிப்பதே சாதனை.

தம்பி - கீழே போவது என்றால்

1. வாழ்வை ஏற்பது,
2. அகந்தையை அழிப்பது,
3. அடிமனத்தை அடைவது,
4. திருவுரு மாற்றம் செய்வது என்று கூறலாமா?

அண்ணன் - அது சரி. நடைமுறையைக் கூறினால்தான் புரியும்.

ஒரு யோகி மோட்சமடைந்தால் அவருக்கோ, அவர் வாழ்வுக்கோ, உலகத்திற்கோ என்ன பலன்?

- ***அவர் ஆன்மா ஜீவனிலிருந்து பிரிந்து ஆண்டவனை அடைகிறது.***
- ***உலகுக்கு அவர் ஓர் உதாரணம்.***

அதற்கு மேல் கூற பலன் எதுவுமில்லை. அதே சமயம் பூரணயோகி மோட்சத் தகுதி பெற்றால் அவர் அகந்தை அழியும். உள்ளே செல்வார். உலகத்துடன் தொடர்பு கொள்வார். அவருடன் தொடர்பு



கொள்பவரெல்லாம் அவர் பெற்றதைப் பெற முடியும். மேலும் அவர் வாழ்விலிருந்தால், அவர் செய்யும் காரியங்கள் உலகில் பரவும். வேலையில்லாதவனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தால், அவன் போன்ற பலருக்கும் - அநேகமாக அனைவருக்கும் - வேலை தானே கிடைக்கும். உலகம் தானே அவர் மாறுவது போல் மாறும்.

- ***விழிப்புற்ற ஆன்மா இனி உலகிலிருக்க சட்டமில்லை என்பது மரபு.***
- ***விழிப்புற்ற ஆன்மா உலகுக்கு வந்து மனத்திலும், உணர்விலும், உடலிலும் சேவை செய்யும் என்பது ஸ்ரீ அரவிந்தம்.***

தம்பி - நான் பெற்ற இன்பம் அனைவரும் பெற வேண்டும் என்பது அதுதானோ?

அண்ணன் - இதுவரை அது சொல்லாகவே இருந்தது, ஸ்ரீ அரவிந்தம் அதைச் செயல்படுத்தியது. யோகம் எனில் ஆன்மா ஆண்டவனை அடைவது. ஆண்டவனிடமிருந்து ஆன்மா எதுவும் பெறுவதில்லை. அது பெறுவது விடுதலை.

தம்பி - என்ன பெற முடியும்?

அண்ணன் - ஆன்மாவின் 12 அம்சங்களையும் உயர்ந்த நிலையில் பெறலாம். ஆன்மாவின் மௌனம் பெரியது. அதே மௌனம் ஆண்டவனின் மௌனமானால் முடிவானதன்றோ?

- ***மரபில் ஆன்மா ஆண்டவனிடமிருந்து அதுபோல் எதையும் பெறுவதாகத் தெரியவில்லை.***
- ***அன்னை ஆன்மா அதுபோல் ஆண்டவனிடமிருந்து அனைத்தையும் பெறுகிறது.***
- ***அது ஆன்மாவுடன் நிற்கவில்லை.***

- *மனத்திற்கும் வருகிறது. உடல்வரைக்கும் வருகிறது.*
- *இதற்கடுத்த நிலையை அன்னை விவரிப்பது அற்புதங்களின் சிகரம்.*

நாம் பெறும் பரிசுகள், விருதுகள், பட்டங்கள் ஸ்தாபனங்கள் மூலமாக, நம் அந்தஸ்திற்காக, நம் செல்வம் அல்லது செல்வாக்கு அல்லது படிப்புக்காகப் பெறுகிறோம். இவையின்றி பெறுவது இயலாத காரியம். இராதாகிருஷ்ணன் தாம் பெற்ற படிப்புக்காக ஜனாதிபதி ஆனார். அதே இராதாகிருஷ்ணனுக்கு அதே அறிவிருந்தாலும், அப்பட்டங்களில்லாவிட்டால் ஜனாதிபதி பதவி வந்திருக்காது. எவரும் அவரைக் கண்டு கொள்ளப்போவதில்லை. அவர் பெற்றதைப் பட்டம் மூலம் பெற்றார். பெர்னாட்ஷா பெற்ற நோபெல் பரிசு பட்டத்திற்காகக் கொடுக்கப்பட்டதில்லை. அறிவுக்காகக் கொடுக்கப்பட்டது. அது உயர்வு.

அன்னையின் உடல் இறைவனிடமிருந்து ஆன்மா மூலம், சைத்தியப் புருஷன் மூலம் பெற ஆரம்பித்தது, முடிவில் நேரடியாகவே பெற்றது என்கிறார் அன்னை. இது யோக மரபில் இல்லாத சித்தி. யோக மரபில் எந்தக் கரணமும் எதையும் பெறுவதில்லை. அன்னை பெறுகிறார். இடையே ஆன்மாவுமில்லாமல் நேரடியாகப் பெறுகிறார்.

தம்பி - அன்னை விஷயம் பெரியது. நமக்குப் புரியாது.

அண்ணன் - மாணவன் புத்தகத்திலுள்ள அறிவை ஆசிரியர் மூலம் பெறுகிறான். அடுத்த நிலையில் நேரே புத்தகத்திலிருந்து பெறுகிறான். புத்தகமும் இல்லாமல் நேரே பெற முடிந்தால் அவன் மேதையாகிறான். சாவித்திரி ஆங்கிலப் பேராசிரியர்கட்குப் புரிவதில்லை.



சரியாக ஆங்கிலம் தெரியாத பெண் பிரார்த்தனை செய்தபின் படித்தால் புரிகிறது என்றார். இவரால் படிக்கவே முடியாது. பல பக்கங்கள் படித்தார். புரிந்தது. இது படிப்பேயில்லாதவனுக்கு ஞானம் நேரடியாக வருவது.

தம்பி - இதுபோன்று ஏராளமானவை பக்தர்கட்கு நடக்கின்றனவே. நாம் அதை அருள் எனப் பொதுவாக அறிகிறோம். என்ன நடக்கிறது எனப் புரிந்து கொள்வதில்லை. அன்னை இறைவனிடமிருந்து நேராகப் பெற்றால், நாம் அன்னையிடமிருந்து நேராகப் பெறுகிறோம். இந்த விளக்கமும் போதாது.

அண்ணன் - விளக்கம் எப்பொழுதும் போதாது. பக்குவம் வந்தால் பிறகு போதும். இந்தியருடலில் ஒளியிருக்கிறது என்று அன்னை கூறுவதை நாம் எப்படிப் புரிந்து கொள்கிறோம்.

தம்பி - ஒளியிருக்கிறது என்று புரிந்து கொள்கிறோம்.

அண்ணன் - நாட்டில் ஏராளமான மேதைகள் ஒளிந்திருக்கிறார்கள் என நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தம்பி - இந்தியாவிலா? சீனுவாச இராமானுஜம் போலவா?

அண்ணன் - அவர் எப்படி வந்தார்? அதன் ஆரம்பம் என்ன? அது போல் மேல்நாட்டில் மேதைகள் - கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றில் - பிறந்திருக்கின்றனரா? ரெய்மன் என்ற ஜெர்மானிய கணித நிபுணர் அவர் போன்றவர். ஜெர்மனி தத்துவம் பிறந்த நாடு. இந்தியா ஆன்மீகம் பிறந்த நாடு. ஒளி உடலிலிருக்கிறது எனில், ஆன்மீகம் மனத்துள் மேதைமையாக மக்களிடையே ஒளிந்துள்ளது எனப் பொருள்.

தம்பி - அப்படியானால் பல ராமானுஜங்கள் இருப்பார்களா?

அண்ணன் - இருக்கிறார்கள், நாம் கண்டுபிடிக்க முடியும். நம்பிக்கை வேண்டும். மேதையாக உருவாகக் கூடியவர்கள் ஆயிரமாயிரம் பேர் நாட்டிலிருக்கிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

தம்பி - அவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா?

அண்ணன் - அதை நம்மால் கண்டு பிடிக்க வழியுண்டு. நாட்டில் அதுபோன்ற நம்பிக்கையேயில்லையே. மேல்நாட்டு திறமை, பழக்கம் ஆகியவை 400 அல்லது 500 வருஷத்தில் ஏற்பட்டது. நமக்கு அது தேவை. அதை உடனே பெற முடியாது. ஆனால் அவசியமாகப் பெற வேண்டும். 50 ஆண்டு சுதந்திரத்தில் நாம் அதைப் பெற்றிருக்கலாம். பெறவில்லை. நம் நாட்டு ஆன்மீகம் அவர்கள் திறமையை விட உயர்ந்தது. அது அவர்கட்குத் தேவை. எளிதில் பெற முடியாது.

தம்பி - வேறு வழியில்லையா?

அண்ணன் - அவர்கள் திறமையின் பெருமையும், அவசியமும், அது ஏற்பட்ட வகையும் நாமறிந்து, ஆழ்ந்து அதை விரும்பினால் பெற வழியுண்டு.

தம்பி - என்ன வழி?

அண்ணன் - நாம் எப்படி நம் ஆன்மீகத்தையும், பண்பையும் பெற்றோமோ அதுபோல் மேல் நாட்டுத் திறமையை நாட வேண்டும். உலகம் பலவற்றை நாடுகிறது. ஆன்மீகம், தத்துவம், ஞானம், விஞ்ஞானம், பண்பு, மானம், சூட்சுமம், தொழில் நுணுக்கம் போன்ற பலவற்றை நாடுகிறது. ஒவ்வொன்றையும் ஓர் இடத்தில் வளர்க்கிறது. நேரம் வந்தபொழுது எல்லாம் ஒன்று சேர வேண்டும். அனைவரும் அனைத்தையும் பெறவேண்டும்.

தம்பி - மனித யத்தனத்தால் இது முடியுமா?



அண்ணன் - தெய்வம் இதைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறது. மனிதன் தன் முயற்சியைப் பூர்த்தி செய்துவிட்டால், மீதியைத் தெய்வம் க்ஷணத்தில் பூர்த்தி செய்யும். நம் ஆன்மீக உயர்வை நாம் முதலில் உணர வேண்டும்.

தம்பி - அமெரிக்கா அதை ஏற்றுக்கொண்டால்தான் நாம் அதைப் பாராட்டுவோம்.

அண்ணன் - சீனுவாச இராமானுஜம், வால்மீகி, வசிஷ்டர், சி.வி.ராமன், காந்திஜி, நேரு, பாரதி, ஸ்ரீ அரவிந்தர், திலகர், பரமஹம்சர், வள்ளலார் போன்றவர் ஒருவர் இருந்தால் என்ன அர்த்தம்? மார்க்கெட்டில் ஒரு மாம்பழம் வந்தால் சீசன் வந்துவிட்டது எனப் பொருள். ஒரு பழத்தின் பின்னால் ஓராயிரம், ஒரு லட்சம் இருக்கிறது எனப் பொருள்.

தம்பி - 100 ராமானுஜம் இருப்பார்களா?

அண்ணன் - நாமறிந்த பெரியவர்களில் எத்தனை பேர் சிறுவயதில் பெரிய ஆத்மா எனத் தம்மை அறிவார்கள். ஆத்மா பெரியதாக இருந்தால் மட்டும் போதாது. அது மலர நாடு அவர்கட்குச் சந்தர்ப்பம் தர வேண்டும். ராமானுஜம் இன்ஸ்டிடூட் என்று ஒன்றுள்ளது. ராமானுஜத்தின் பரம்பரையை அவர்கள் தேடினால் 100 பேர் அல்ல 1000 பேர் கிடைப்பார்கள். அவர்கள் அனைவரும் நாட்டின் சொத்து. அவர்கள் மேதா விலாசம் வெளிவர துணை செய்யவேண்டும்.

தம்பி - எப்படிக் கண்டுபிடிப்பது?

அண்ணன் - அறிவைக் கருதாமல், ஆன்மாவின் சின்னங்களைத் தேடினால் தெரியும். அன்னையிடம் அதற்கு வழியுண்டு. மேல் நாட்டு முறைகள் சிறப்பாகிவிட்டதால், அதன் மூலமும் காண முடியும். முயற்சி எழுந்தால் வழிகள் உள்ளன. ஆன்மீக விழிப்பு ஏற்பட்டுவிட்டால், மேதா விலாசத்திற்குரிய genius பல ஆயிரம் பேரை நாம்

காண முடியும் என்பது என் அபிப்பிராயம். Life Divine ஐப் புரிந்து கொண்டால் மேதாவிலாசம் வரும். நாடு ஆன்மீக சித்திக்குத் தயாராக இருக்கும்பொழுது மேதாவிலாசம் அடுத்தது தானே. இது சிறியது என்பதால் எளிதாகப் பெறலாம்.

தம்பி – அது நடக்கும் என்பதற்கு அறிகுறிகள் உண்டா?

அண்ணன் – மடையனை மேதையாகத் திருவுருமாற்றும் திறனுடையது அருள். பாஸ் செய்ய முடியாதவன் பாஸ் செய்தால் அது பிரார்த்தனை பலித்ததாகும். அவன் முதல் மார்க் வாங்கினால் அது திருவுருமாற்றம். ஆயிரம் ஏழைகள் உழைத்து ஏழ்மையைப் போக்குவது கடினம். அவர்கள் பெரும் பணம் சம்பாதிப்பது திருவுருமாற்றம். அன்னையின் வாழ்வில் நடந்தவை அனைத்தும் திருவுருமாற்றம். நமக்குத் தெரிந்தவை கொஞ்சம். Industry உலகத் தொழில் சரித்திரத்தில் அதிகபட்சக் கடன்பட்ட கம்பெனி தேறுமா? தேறுவது ஆச்சரியம். அருளின் கடைக்கண் பார்வை என்ன செய்தது? கடனுக்குச் சமமான இருப்பு சேர்ந்தது. அது திருவுருமாற்றம். ஒரு வகையில் அன்னையிடம் பெற்றனவெல்லாம் திருவுருமாற்றமே. நாடு அதை உணருமா? அயோக்கியன் மாறுவது இல்லை. மாறினால் ஆச்சரியம். அயோக்கியனுக்கு நாணயஸ்தன் என விருது படைப்பது போன்றது திருவுருமாற்றம்.

- ***நாட்டில் ஆயிரமாயிரம் மேதைகளின் வித்துண்டு.***
- ***அருள், மடையனையும் மேதையாக மாற்றும்.***
- ***நாடு தன் சிறப்பான ஸ்ரீ அரவிந்தத்தை அறிந்து போற்ற வேண்டும்.***

200 வருஷத்திற்கு நாகரீகமேயில்லாத நாட்டில் இன்று அனைவரும் காரில் போவதைக் காண்கிறோம். இது



மனித முயற்சி. அருள் இந்தியாவை மேதைகள் ஆக்கும் என நம்பக் கூடாதா?

- இந்தியா ரிஷிகள் வாழ்ந்த நாடு.
- இந்தியா மேதைகள் வாழுமிடம் என ஆகும் என்பதே ஸ்ரீ அரவிந்தம் தரும் இலட்சியம்.
- வறுமை ஒழிப்பு என்பதில்லை. நாடு சீக்கிரம் செல்வம் கொழிக்கும்.

நாடு தயார். மனிதன் தயாரா என்பதே கேள்வி.
பொய்யை விட்டு நாடு மெய்யை ஏற்குமா?
மெய்யை மட்டும் கைக் கொள்ளுமா?
அது நடந்தால் மீதி அனைத்தும் தானே வரும்.

தம்பி – 2000 A.D. க்கு உரிய இலட்சியம் இது. தேசீய சர்க்கார் அமைத்து, அவசரச் சட்டம் (administrative emergency) போட்டு, பெருஞ்செல்வம் உற்பத்தி செய்து, அருளை நம்பி, சத்தியமாகச் செயல்பட்டால் இந்தியா மேதைகள் நாடாகும் என்பதில் ஐயமில்லை.

அண்ணன் – நாம் பேசக்கூடாது. நாமே அதைச் செய்ய முன்வர வேண்டும். நீ என்ன செய்வாய், நான் என்ன செய்ய வேண்டும் என்பது முக்கியம். உலகுக்குச் சொல்வது அப்புறம்.

தம்பி – நாம் சொல்வது பெரிய விஷயம். பலர் ஏன் அன்னையிடம் வந்தோம் என வருத்தப்படுகின்றனர்.

அண்ணன் – விஷயம் என வந்துவிட்டால், அதுதான் முதற் கேள்வி. ஏன் அன்னை என்றும் போலிருக்கக்கூடாதா என மனம் நினைக்கிறது. அதற்கு விலக்கானவரை நான் அறியேன்.

தம்பி - காரியம் ஜெயிக்கிறது என அன்னையிடம் வந்தவர்கள் தான் அப்படிப் பேசுவார்கள்.

அண்ணன் - பொதுவாக நீ சொல்வது உண்மை. ஆனால் மனிதனுக்குச் சுபாவம் என்று ஒன்றுண்டு. முதலில் அன்னை நம் சுபாவத்தையொட்டிச் செயல்படுகிறார்கள். அடுத்த கட்டத்தில் சுபாவத்தை மாற்றாமல் பலனிருக்காது. அந்த நேரம் அன்னை வேண்டாம் என்று கூறாதவரில்லை.

தம்பி - நிலைமை எக்கச்சக்கமாக தர்மசங்கடமாக வரும்பொழுது மனிதன் அன்னை வேண்டாம் என்பதைப் பார்த்திருக்கிறேன். சில சமயங்களில் எப்படியும் போகமுடியாது. அதாவது அன்னையை ஏற்கவும் முடியாது. ஏற்காமலிருக்கவும் முடியாது.

அண்ணன் - நாம் அன்னையை மையமாக வைத்துப் பேசுவதால் அன்னை வேண்டாம் என்கிறார்கள். இதுதான் வாழ்வின் இரகஸ்யம். குடும்பம் பிளவுபடுவது இதனால்தான். கணவன் மனைவி சண்டை இதனால்தான். மனிதன் விரக்தியடைவதே இதனால்தான்.

தம்பி - நீங்கள் சொல்வது ‘எனக்கு ஆதாயம் மட்டும் வேண்டும்’ என்று ஆரம்பித்து கடமையைச் செய்ய வேண்டி வரும்பொழுது மனிதன் கசங்குவதைக் கூறுகிறீர்கள்.

அண்ணன் - இங்கு பாரத்தை அன்னைமேல் போட்டுப் பேசுகிறார்கள். தம் கடமையைத் தாம் ஏற்க மறுப்பவர் நிலையிது. வெளிநாட்டில் போய் எவ்வளவு நாள் வசதியாகத் தங்கினாலும், வயதாக ஆக தாய் நாட்டை உடல் நினைத்து ஏங்கும். அதுபோல் மனிதன் தான் விட்டு விலகி வந்த வாழ்வை நாடி ஏங்குகிறான். அன்னை மீது வெறுப்பு வருகிறது.



தம்பி - நம்மால் நியாயமாக வாழ முடியவில்லை. யாரையாவது குறை கூறுகிறோம். பக்தர்கள் ஒரு நேரம் அன்னையைக் குறை கூறுகிறார்கள். நாம் பிறரைச் சொல்லக்கூடாது. நம் வீடு அப்படித் தானேயிருக்கிறது. அன்னையிடம் வருமுன் நாம் எங்கிருந்தோம்? மாதம் 250/- செலவு செய்தோம். இன்று 25,000/- போதவில்லை, யாராவது நம் வீட்டில் இவையெல்லாம் அன்னையால் வந்தது என தானே ஏற்பார்களா? நம் வீட்டில் ஒருவர் கூட அதை ஏற்கமாட்டார்கள். மேலும் அன்னையை ஏற்காவிட்டால், உள்ளதும் போய்விடும் என்றால், ஏற்கமுடியாமல் திட்டுவார்கள். ஆரம்பத்தில் மனிதர்களைத் திட்டுவார்கள், முடிவில் அன்னையைத் திட்டுவார்கள்.

அண்ணன் - அன்னை இவற்றையெல்லாம் சொல்லியிருக்கிறார்களா?

தம்பி - நேரடியாகச் சொல்லவில்லை.

அண்ணன் - நேரடியாகவும் சொல்லியிருக்கிறார்கள். எல்லாம் எழுத்தில் - அச்சில் - இருக்கிறது. நாம் படிப்பதில்லை. படித்தால் அதைப் பொருட்படுத்துவதில்லை.

தம்பி - இனி முடியாது என்ற நேரமாவது அன்னையை நம்ப வேண்டும்.

அண்ணன் - அதைச் செய்தால் கஷ்டம் விலகும். முடியும் என்ற நேரம் அன்னையை நம்பினால் அதிர்ஷ்டம் வரும்.

தம்பி - யாருக்கும் அதிர்ஷ்டம் தேவையில்லை. அவர்களை மாறச் சொல்லக்கூடாது. அதுதான் முக்கியம். நாம் மாறிக் கொள்ளலாம். பிறருக்குச் சொல்லமுடியாது. மனிதன் தானுள்ள வாழ்வை ஆழ்ந்து அனுபவித்து ரசிக்கிறான். அதை விட்டு மாறி உயர்ந்ததை ஏற்க மனிதன் முன் வருவதில்லை. இறைவன் மனிதனைக் கட்டாயப்படுத்துவதில்லை. அதை விரும்பி அன்னையை

நாடுபவர்கட்கு யோகத்தில் திருவுருமாற்றமும், வாழ்வில் அதிர்ஷ்டமும் உண்டு. ஏராளமான பேர் அன்னையை நாடி வந்து பல்வேறு பலன் பெற்றுள்ளனர். யோகத்திற்காக எவரும் அவரை நாடி வரவில்லை. வாழ்விலும் திருவுருமாற்றத்தை எவரும் நாடியதாக இதுவரை நான் கேள்விப்படவில்லை.

**பணம் எப்படி உற்பத்தியாகிறது?**

தம்பி - பணம் என்பதைப் பற்றி மேலும் பேச விரும்புகிறேன். ஆதியிலிருந்து புரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அண்ணன் - உழைப்பால் பணம் உற்பத்தியாகிறது. அதேபோல் ஒத்துழைப்பாலும், அறிவாலும் பணம் ஏற்படுகிறது.

தம்பி - அறிவால் உழைப்பு அதிகம் சம்பாதிக்கும் என்று கொள்ளலாம். ஒரு வீட்டில் அனைவரும் ஒத்துழைத்தால் சண்டை போடுவதைவிட அதிகம் சம்பாதிக்கலாம்.

அண்ணன் - இதுவரை புரிந்தால் போதும். ஆனால் உழைப்பு சம்பாதிப்பதைப்போல் அறிவு மட்டும் பணம் ஈட்டும். அதேபோல் ஒத்துழைப்பு மட்டும் பணம் சம்பாதிக்கும் என்பது சட்டம்.

தம்பி - அறிவு சம்பாதிக்கும் எனப் புரியும். ஒத்துழைப்பு மட்டும் எப்படிச் சம்பாதிக்க முடியும்?

அண்ணன் - நிலம் கரம்பாக இருக்கிறது. அண்ணன், தம்பி சண்டை போட்டுக் கொண்டு நிலத்தை கரம்பாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஒத்துழைப்பால் விளைச்சல் எழும். சட்டம் புரியாவிட்டாலும், ஏற்றுக் கொள்ள முடியுமா?

தம்பி - பலர் ஒத்துழைத்தால் பணம் எழும் எனத் தெரிகிறது. சரி, நான் ஏற்றுக் கொள்கிறேன்.



அண்ணன் - நிலத்தில் பணம் உற்பத்தியாகிறது. பாக்டரியில் பணம் வருகிறது. அதேபோல் நிலமும், பாக்டரியுமில்லாமல் service sectorஇல் டெய்லர், எலக்ட்ரீஷியன், ஆசிரியர், வக்கீல் போன்றவர் சேவையால் பணம் உற்பத்தியாகிறது. அடுத்த கட்டத்தில் மனத்தின் அறிவால், திறனால் பணம் உற்பத்தியாகும். அதற்கும் அடுத்தது ஆன்மா. ஆன்மாவால் எதையும் உற்பத்தி செய்ய முடியும். பணத்தை அதனால் ஏராளமாக உற்பத்தி செய்ய முடியும்.

தம்பி - அறிவு, அதாவது மனம் தீவிரமாகச் செயல்பட்டால் நிலம் அதிக உற்பத்தி செய்யும், பாக்டரி அதிக உற்பத்தி செய்யும், சர்வீஸ் அதிகமாக உற்பத்தி செய்யும் என்பது சரி. மனம் மட்டுமே பணத்தை உற்பத்தி செய்யுமா?

அண்ணன் - நிலம் மட்டுமே பணத்தை உற்பத்தி செய்வதைப்போல் மனம் மட்டும் பணம் உற்பத்தி செய்யும் திறனுடையது. அதை ஏற்பது நல்லது. அது முடியாவிட்டால், மனத்தின் அறிவு பணம் உற்பத்தியாகுமிடத்தில் அதிகம் உற்பத்தி செய்ய உதவும் என ஏற்றாலும் போதும்.

தம்பி - நான் ஏற்றுக்கொள்கிறேன். மேலும் சற்று விளக்கமாகச் சொன்னால் தேவலை.

அண்ணன் - பணம் என்பது நம்பிக்கையால் எழுவது. நம்பிக்கை பணம்.

தம்பி - சரி.

அண்ணன் - மார்க்கெட்டுக்குக் கம்பனி மீது நம்பிக்கையிருந்தால் கம்பனிக்கு மேலும் பணம் வருகிறது.

தம்பி - கம்பனியும், மார்க்கெட்டும் இல்லாமலே பணம் வரும் என்று கூறுகிறீர்களே.

அண்ணன் - எல்லாக் கோவில் ஸ்தல புராணங்களிலும் வில்வமரத்து இலையைப் பவுனாகப் பறித்தார்கள் என்பதுண்டு.

சாமியார்கள் கையை நீட்டினால் லிங்கம் வருகிறது. அதுபோல் பணமும் வரும். அவற்றையெல்லாம் நான் கூறவில்லை.

தம்பி - அதை விடுங்கள். உலகத்தை மனம் உற்பத்தி செய்தது. ஆதியில் பணத்தை மனம் உற்பத்தி செய்தது. அதனால் இன்று மனத்தால் பணம் உற்பத்தி செய்ய முடியும் என நம்பலாம். ஒரு கருவி இடையேயில்லாமல் எப்படி உற்பத்தி செய்வது?

அண்ணன் - கருவி மூலம் மனம் - அறிவு - அதிகமாகப் பணம் உற்பத்தி செய்ய முடியும் என்று ஆரம்பிப்போம். தவணை முறை வந்த பிறகு பணம் பெருகியது.

தம்பி - 10 மடங்கு பெருகியது. கடன், அடைமானம் இல்லையென்றால் பணம் சுருங்கும்.

அண்ணன் - தவணை முறை, கடன், ஈடு, கைமாற்று இல்லையென்றால் குடும்பம் நடக்காது. 1/100 பாகம் கூடப் பணப்புழக்கமிருக்காது. அதாவது கடன், தவணை, அடைமானம் பணத்தை 100 மடங்கு அதிகப்படுத்தியுள்ளது.

தம்பி - அது சரி. இதை ஏற்றுக் கொள்ளலாம்.

அண்ணன் - மேலும் பணம் உற்பத்தி செய்யும் சாதனங்கள் நம்மிடம் இன்றுள்ளதைப்போல் 1000 மடங்குள்ளது என்பதை உலகம் அறியாது. மேல் நாடுகளில் பணம் நகரும் வேகம் 3 என்றால் இந்தியாவில் 1½ என்கிறார்கள். கம்ப்யூட்டர் வந்த பின் 3 மேலும் அதிகரித்துவிட்டது. இந்தியாவில் இன்றுள்ள பணம் மேல் நாட்டு வேகத்தில் நடமாடினால், இருமடங்காகும் அன்றோ?

தம்பி - ஆமாம், ஆச்சரியமாக இருக்கிறதே. நம்ப முடியவில்லையே. யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்களே,



வியாபாரிக்கு முதல் 6 மாதம் ஒரு முறை புரண்டு வருவது 3 மாதம் ஒரு முறை புரண்டால் இலாபம் 2 மடங்கு என்றாகுமன்றோ?

அண்ணன் - இதுபோல் பணத்தை அதிகரிக்க 10 முதல் 20 வழிகள் உண்டு. நாம் மேல் நாட்டார் பழக்கத்தில் எதை எதைப் பின்பற்ற முடியுமோ அவற்றையெல்லாம் பின்பற்றினால் மட்டும் நம் பணம் 3 or 5 மடங்கு அதிகரிக்கும்.

தம்பி - புதியதாகப் பணம் உற்பத்தியாகுமா? உள்ளது அதிகமாகப் பயன்படுமா?

அண்ணன் - உள்ளது 5 மடங்கு பயன்படும். இரண்டும் ஒன்றுதானே?

தம்பி - குடும்பத்தில் உதாரணம் சொன்னால் புரியும்.

அண்ணன் - அது முடியாது. தவணை முறையால் அதிகப் பொருளை வாங்குவதைத்தான் சொல்ல முடியும். மாதம் 5000ரூபாய் மளிகை, ஷாப் சாமான் வாங்கும் குடும்பம் 1. விரயத்தை விலக்கி 2. இருப்பதையே வாங்குவதைத் தவிர்த்து 3. தேவையில்லாததை வாங்குவதை விலக்கி, திட்டமிட்டுச் செலவு செய்தால் நாளாவட்டத்தில் 5000 குறைந்து 4500 ஆகவும், 4000மாகவும் ஆவதைக் காணலாம். அதாவது 500 அல்லது 1000 ரூபாயை 'உற்பத்தி' செய்ததாகும். இதன் விளைவாகப் புதிய பணவரவு ஏற்படும். குடும்பம் சிறிய இடம். அதன் மூலம் பணம் உற்பத்தி செய்வதை விளக்குவது கடினம்.

தம்பி - புதியதாகப் பணம் எப்படி உற்பத்தியாகும் என்று சொல்ல முடியுமா?

அண்ணன் - மனத்தின் திறனை 5 or 10 மடங்கு அதிகப்படுத்த முடியுமன்றோ? அப்படிச் செய்தால் 5 or 10 மடங்கு உற்பத்தி செய்யும் திறனை மனம் பெறுமன்றோ?

தம்பி - அது சரி. உத்தியோகம் செய்பவனுக்கு யாரும் 5 அல்லது 10 மடங்கு சம்பளம் தரப்போவதில்லை.

அண்ணன் - மனத்தின் திறன் எவ்வளவு உயர்கிறதோ அதற்குரிய வாய்ப்பை அன்னை கொடுத்துவிடுவார். அன்னையைப் போல சமூகமும் கொடுக்கவல்லது. தன் திறன் உயர்ந்தால் மனமே நேரே பெறவல்லது.

தம்பி - 100 மடங்கு, 1000 மடங்கு போகட்டும். மனத்தின் திறமையை 10 மடங்கு உயர்த்தலாம். அது வருமானத்தை 10 மடங்கு உயர்த்தும். 10 மடங்கு மனம் உயர்ந்தால் அன்னை அதைப்போல 10 மடங்கு பலன் தருவார். பணம் ஈட்டும் திறனை 10 மடங்கு அல்லது 50 மடங்கு உயர்த்த வழி சொல்லுங்கள்.

அண்ணன் - உலகில் சாதித்தது அனைத்தும் மனமே. புத்தர் உலகை வென்றது மனத்தின் திறத்தால்.

1. பணம் பெருகும் வழிகளை அனைத்தும் அறிய வேண்டும்.
2. அவற்றைப் பூரணமாகப் பின்பற்ற வேண்டும்.
3. அன்னையை நம்ப வேண்டும்.
4. மனம் தூய்மையாக இருக்க வேண்டும். இதுவரை செய்தால் 100 மடங்கு பெருகும். 10 மடங்கு நிச்சயம்.

**பெரும் பணம்**

தம்பி - பணம் பெருகும் வழிகளைச் சொல்லுங்கள்.

அண்ணன் - 5000ரூபாய் கடைச் சாமான்கள் வாங்கும் வீட்டில் திட்டமிட்டு அதை 4000மாக மாற்ற வேண்டும். அது முடியாது என்றால் அக்கறையில்லை எனப் பொருள். அவர்களுக்கு இது பலிக்காது. நாம் கொடுக்க



வேண்டியதை உடனே கொடுத்துவிட வேண்டும். பணத்திற்குக் கவனம் தேவை. எல்லாக் காரியங்களையும் பண நோக்கத்தில் கணக்கிட வேண்டும். இவையெல்லாம் சாதாரண நல்ல முறைகள். பணவரவு இரட்டிக்க உதவும். அது நம்பிக்கையை வளர்க்கும். உண்மையான சக்தி மனத்திலிருக்கிறது. Mind is infinite மனம் அனந்தமானது, அளவுகடந்து சாதிக்கவல்லது. உலகத்தில் நடந்த அற்புதங்களெல்லாம் மனம் சாதித்தவை. பெரிய மதங்கள், சாம்ராஜ்யங்கள், விஞ்ஞானக் கருத்துகள் அனைத்தும் மனத்தில் உற்பத்தியானவை. பணத்தை ஆதியில் உற்பத்தி செய்ததும் மனமே. மனத்தின் அளவுகடந்த சக்தியை நம்புவதில் நான் சொல்லும் சூட்சுமம் உண்டு.

தம்பி - இவையெல்லாம் எனக்குத் தெரியும். இந்தக் கோணத்தில் நான் சிந்தித்தில்லை. பாங்க் பணம் தரும்பொழுது மனிதனை நம்பித் தருவதில்லை. சொத்தை நம்பித் தருகிறது. சொத்தை மட்டும் நம்பும் பாங்க் மனிதனை மட்டும் நம்பி வற்புறுத்தி பணம் கொடுத்ததை நாமறிவோம். வட்டிக்குக் கொடுப்பவர்களும் சொத்தேயில்லாத நாணயஸ்தனுக்கு ஏராளமான பணம் கொடுத்ததை நாம் அறிவோம்.

பிறர் ஒருவன் நாணயத்தை நம்புவதால் பணம் உற்பத்தியாகிறது. நாமே நம் மனத்தின் infinite அளவுகடந்த சக்தியை நம்பினால், உலகில் எதையும் சாதிக்கலாம். அதைக் கருதும்பொழுது பணம் சிறியது. அதைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யலாம் என்பதை நாம் பலர் வாழ்விலும் பார்க்கிறோம்.

அண்ணன் - அந்த உண்மையை மனம் ஏற்கவேண்டும். சூட்சுமம் அங்குள்ளது. வினோபா கொள்ளைக்காரனை போலீஸில் சரணடையச் சொன்னார். ஏது அவருக்கு

அந்த சக்தி? அது அவருடைய மனத்திண்மை. ஆன்மீக சக்தி.

தம்பி – அன்பர்கள் அடாவடிக்காரன் பணிந்து போவதைக் காண்கிறார்கள். அடாவடிக்காரனிடம் கொடுத்த 1000ரூபாய் திரும்பி வந்தால், அந்த அன்பரால் பல ஆயிரம் உற்பத்தி செய்ய முடியும். கேட்கும் பணம் வசூலாகாத நிலையில் கேளாமல் 1000ரூபாய், 10000ரூபாய், லட்ச ரூபாய் வருகிறது எனில் அந்த அன்பர் மனம் பல கோடிகளை உற்பத்தி செய்யவல்லது. அன்னை மனதில் குடி கொண்டிருந்தால், அம்மனம் ஏராளமாக எதையும் உற்பத்தி செய்யும். ஏராளமான பணத்தை உற்பத்தி செய்யும்.

அண்ணன் – இது இல்லாமல் நான் சொல்வது நடக்காது. இது இருந்தால் மேற்சொன்ன நிபந்தனைகள், முறைகள் செயல்படும்.

தம்பி – பணத்தை உற்பத்தி செய்யும் சூட்சுமம் இங்கிருந்தால், பணத்தை ஒடுக்கும் சூட்சுமம், நம் கெட்ட குணத்திலிருக்கிறது. பிறருக்கு வருவது பொறுக்கவில்லை என்றால், நமக்கு வருவது தடைபடும்.

அண்ணன் – சூட்சுமத்தின் நல்லதைப் பெறுவது கடினமன்று. சூட்சுமத்தின் கெட்ட பகுதியை விலக்குவது கடினம்.

தம்பி – நல்லவனுக்கு இது பலிக்கும். நல்லவனாக இருப்பது கடினம். நம் கெட்ட குணம் வெளிப்பட்டால், அன்னை வருவது தடையாகும். பணவரவு நிற்கும்.

அண்ணன் – மனிதனுக்கு இது கடுமையான நிபந்தனை. மாற முயல்பவன் மாறிவிடுவான். அன்பர்கள் பெரும் பணத்தை தங்கள் வாழ்வில் உற்பத்தி செய்ய முடியும் என்பது உண்மை.

தம்பி – ஓஹோ, அதனால்தான் நமக்கு விவரம் தெரியாத நேரம் ஏராளமாகப் பணம் வருகிறது.



அண்ணன் – விவரம் தெரியாதபொழுது, நம் குணம் எழுந்து செயல்படுவதில்லை. விவரம் தெரிந்தவுடன் பணம் நின்றுவிடுகிறது. இதையே யோக பாஷையில் சொல்ல வேண்டும்.

- **நாம் நாலு பேர் போலிருக்கிறோம் (We are a social being).**
- **நாலு பேர் சாதாரண மனிதர்கள்.**
- **சாதாரண மனிதனுக்கு, அனைவருக்கும் நடப்பது நடக்கும். சம்பளம் வரும்.**
- **அவன் அன்னையை அறிகிறான், நம்புகிறான்.**
- **ஆன்மீக, அருளின் சூழல் அவனுள் வருகிறது. விவரம் எதுவும் தெரியாததால் ஏராளமாகப் பணம் வருகிறது. ஆயிரம் நல்லவை நடக்கின்றன.**
- **இதை மனிதன் கவனிக்கிறான். அவன் மனம் பட்டவுடன் நல்லது நின்றுவிடுகிறது.**
- **நாமெல்லாம் சாதாரண மனிதர்கள்தானே எனில், அவனுக்குள்ளது நடக்கிறது.**
- **அன்னையை அறிந்தவன் சாதாரண மனிதனில்லை. அவன் உயர்ந்தவன்.**
- **தான் உயர்ந்தவன் எனத் தெரிந்ததும், அவன் உயர்வைக் காப்பாற்றலாம்.**
- **அல்லது மற்றவர்கள் போலிருக்கலாம்.**
- **உயர்வைக் காப்பாற்ற தான் அறிந்த உயர்வைக் கருதி நாலு பேர் போலிருக்கக்கூடாது என முடிவு செய்யவேண்டும்** (cease to be a social being and become a psychological being).
- **இதைச் செய்பவன் அன்னை அன்பன். அவனுடைய பண வரவு வளர ஆரம்பித்தால் நிற்காது.**
- **நாலு பேர்போல் இருக்க விரும்புபவனை நாம் கணக்கில் சேர்க்கக் கூடாது.**

- சமூகம் நம்பாததை, பின்பற்றாததை, நல்லது என அறிவதால், அன்னைக்குரியது என அறிவதால் பின்பற்ற, ஏற்று நடக்க மனம் உறுதி பெற வேண்டும்.
- அப்படி முக்கியமாக மனிதன் விட வேண்டியவை,
  - சிறுதெய்வ வழிபாடு, சடங்குகள்,
  - விசேஷங்களில் ஆர்வம்,
  - சின்ன புத்தி, மட்டமான குணங்கள்.
- அப்படி முக்கியமாக மனிதன் ஏற்க வேண்டியவை,
  - பிறர் வாழ்வு மலர்வதில் மனம் மலர வேண்டும்.
  - பொய் சொல்லக்கூடாது.
  - பரந்த மனப்பான்மை வேண்டும். அடக்கம் அதிகமாக தேவை.
- இந்த லட்சணத்துடன் ஓர் அன்பர் இருந்தால் அவர் செய்வன அனைத்தும் பலிக்கும். அவருக்கும் பணம், அருள், ஏராளமாகப் பெருகும்.
- இந்த அடிப்படைகளிலிருந்தால் பணத்தின் வரலாறு தெரியுமானால் அது பெருகும். பெருகிக் கொண்டேயிருக்கும்.
- பணத்தின் வரலாறு தெரியுமுன் பணம் குவியும்.
- பணத்தின் வரலாற்றை எந்த பொருளாதார புத்தகத்திலும் படித்துக் கொள்ளலாம்.
- இம்முறையால் நிம்மதி, சந்தோஷம், வெற்றி ஆகியவற்றைப் பெருவாரியாகப் பெறலாம்.

*தொடரும்...*

❊ ❊ ❊

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## மனம் என்ன செய்யும்

- ❖ நல்லபடியாக positive இருந்தால் எதையும் சாதிக்கும்.
- ❖ தவறாக இருந்தால் negative எதையும் சீக்கிரம் அழிக்கும்.

- இரண்டாம்தாரமாக வாழ்க்கைப்படுவது அதிர்ஷ்டம் என்ற வீட்டில் பெரிய மாப்பிள்ளையை என் மனம் புள்ளியாகப் போட்டது, போட்ட புள்ளி நிறைவேறியது.
- தகப்பன் தெருவில் வளையல் விற்பவர், தாயார் கொல்லையில் களை எடுப்பவர். என் படிப்பு 5 வகுப்பு. மாமன் உதவியால் வித்வான் படித்து 1945இல் ரூ.25க்கு வேலைக்குப் போனேன். 1950இல் B.A., படிக்க முடிவு செய்தேன். 53இல் B.A., 57இல் B.T., 60இல் M.A. படித்தேன். தமிழ்ப் பண்டிதராக இருந்து தலைமையாசிரியரானேன். நான் நினைத்ததை என் மனம் சாதித்தது.
- SSLC, 1000 ரூபாய்க்கு உட்பட்ட சம்பளமும் M.A.யாகவும், 5000ரூபாய் சம்பளமாகவுமென உறுதியால் மாறியது.

மனம் சாதிக்கும் என்பதற்கு எவர்க்கும் ஆயிரம் உதாரணங்கள் உண்டு. அத்துடன் அவர்கள் மனம் வேறொன்றையும் அறியும். 'மாப்பிள்ளை பெரியதுதான். இன்று கிடைத்துவிட்டது. நடுவில் பட்டபாடு அதிகம். பாடு எனில் சும்மாயில்லை. கிடைக்கும் என்ற பிறகு என் மனம் செய்த கிராக்கியை நான் அறிவேன். என்னமோ நடந்துவிட்டது இன்று. நடக்காமல் போயிருந்தால் ஆச்சரியமில்லை. எனக்கே பொறுக்கவில்லை போலும். ஏதோ அதிர்ஷ்டமிருந்தது. நல்லபடியாக முடிந்துவிட்டது என்பது ஓர் அனுபவம். நான் B.A., படிக்கவேண்டும் என்று சொல்வதைக் கேட்டு சிரிக்காதவரில்லை. அதனால் கைவிட்டேன். பேர் உதவி வந்தது. உதவியை நான் பெற அதிகாரம் செலுத்தினேன். இரண்டு முறை பெயிலானேன். வெட்கத்தை விட்டு அதிகாரம் செய்ததை மாற்றிக் கெஞ்சினேன். எப்படியோ முடிந்தது. எதற்கும் சுழி வேண்டாமா? காலம், நேரம் வரவேண்டாமா? "எனக்கு முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் ஏராளம். என் முகம் விகாரமானது. அதை மறைக்க நான் அன்பாகப் பேசுவேன். என் அன்பை ஏற்றவர் என்னை அழகு என்றனர். என் மனம் அனைவரையும் வெறுத்தது. எதுவுமே பிடிக்கவில்லை. எவரையும் எளிமையாகத் துரோகம் செய்வேன். துரோகம் கைமேல் பலன் தரும். ஆதாயமிருந்தால் அன்பாகப் பழகுவேன். இல்லை என்றால் திரும்பிப் பார்க்கமாட்டேன். என் வாழ்வில் எனக்கு யார் மேலும் பிரியம் ஏற்பட்டதேயில்லை. யாரை நினைத்தாலும் வெறுப்பாக இருக்கிறது. மனம் அசுர வேகத்தில் செயல்பட்டது. எனக்கு வாழ்வில் எப்பொழுதும் பிரச்சினைகளேயில்லை. பணம் ஏராளம். பிரச்சினைகளேயில்லை என்றால் எனக்கு வாழ்வே 1 நாள் கூட இருந்ததில்லை. என் காலமும் முடிந்துவிட்டது."

*continued in the back cover...*

## மனம் என்ன செய்யும் - பொறாமை

பொறாமை என்பது தீ. உடனே எரிக்கும். விளக்கம் தேவையில்லை. தேவையேயில்லை. வீடு வாங்க வேண்டுமென்று காலையில் ஆடிட்டரிடம் கூறினேன். மாலையில் அப்பணத்திற்கு ஆபத்து வந்துவிட்டது.

- ❖ என் நண்பர் அவரிடம் இருந்த இரண்டாம் காரை எனக்கு உபயோகத்திற்குக் கொடுத்ததை எனக்கு பொறாமையேயில்லை என்று கூறும் நண்பரிடம் கூறினேன். 15ஆம் நாள் நண்பரில்லை. நான் சொல்லிய பின் அவருடைய பொறாமை எனக்குத் தெரிந்தது.

  நாம் அனைவரும் இதுபோன்ற பல உதாரணங்களை அறிவோம், இதன் சாரத்தை நாம் அறிவோம்.

- ❖ யாரிடம் சொல்லிய விஷயம் கெட்டுப் போகிறதோ, அவருடைய பொறாமை தழலாக எரிகிறது.

### பிறர் பொறாமையிலிருந்து தப்பலாம் - நிச்சயமாகத் தப்பலாம்.

தப்ப வழி தெரியவில்லை என்றால் கஷ்டம். நாமெல்லாம் அவ்வழியை அறிவோம். பொறாமைக்காரர்களிடம் விஷயத்தைச் சொல்லாவிட்டால், பொறாமை செயல்படாது. இதைவிடக் கடுமையானது அது நம் பொறாமை. நமக்கு நம் மீதுள்ள பொறாமை. பொறாமை எனக் கூறுவது பொருந்தாது. எல்லாம் நல்லபடியாக நடந்து வரும்பொழுது நாம் சந்தோஷப்பட்டால் காரியம் கெட்டுவிடுகிறது. எனக்கே பொறுக்கவில்லை என்கிறோம். இங்கு ஒரு பெரிய தத்துவம் உண்டு. இதிலிருந்து தப்புவது சிரமம். தப்ப வழி தெரிவது பெரியது. தெரிந்தால் எதையும் சாதிக்கலாம்.

நாமறிந்த சிறிய வாழ்வில் அன்னை பெரியதைத் தருகிறார். அன்னை தருவது நம் மனத்தில் பட்டால் கருகிவிடும். அது நம் மனத்தின் தன்மையன்று. மனத்தின் தன்மை. அதனால் நம்மையறியாமல் பெரிய காரியங்கள் நடந்தால் - மனத்திலிருந்து தப்பிவிட்டதால் - அவை கூடி வருகின்றன. அருள் அப்படிச் செயல்பட விரும்பினால் நமக்கு வரும் அதிர்ஷ்டத்தை நம் கண்ணில் படாமல் அன்னை முடிக்கிறார். இதை நாமே செய்ய வழியுண்டா? பெரியது வரும் நேரம், வந்தால் இது என் மனத்தில் படக்கூடாது என முடிவு செய்து, முடிவைச் சமர்ப்பணம் செய்தால், காரியம் முடியும்வரை அது நினைவு வாராது. ஓர் உதாரணம்.

- ❖ "எல்லாம் போனபின் எல்லாமிருப்பதுபோல் ஒரு பெரிய காரியம் கூடி வந்தது. ஆச்சரியம், என் உலகமே அதிர்ந்தது. நல்லபடியாக முடிய வேண்டும் என்றேன். 10 மடங்கு நல்லபடியாக முடிந்தது. ஆனால் அடுத்தாற்போல் அதே போன்ற மற்றொரு காரியம் முடியவேண்டும். எனக்கு வழி தெரியவில்லை. நம்பிக்கையில்லை. அன்னை என் கண்ணிலும், மனத்திலும் படாதபடி அதை முடித்த பொழுது, அதன் தரம் உயர்வாகவும், செலவு குறைவாகவும் முடித்தார். முடிந்தபிறகு பிறர் எடுத்துச் சொன்ன பிறகுதான் இது இவ்வளவு பெரியதாக முடிந்ததற்குக் காரணம், என் கண், என் மனத்திலிருந்து தப்பியதே காரணம் என அறிந்தேன்."